



# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 61 குரோதி வருடம் மார்கழி மாதம்
17 ஆம் திகதி புதன்கிழமை ஹிஜ்ரி 1446 ரஜப் 01 (01.01.2025)





## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை சர்ச்சை;

# இலவச மதிப்பெண் வழங்குவது அடிப்படை மனித உரிமை மீறல்

( ஆர்.மனோசங்கர் )

அண்மையில் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் முன்கூட்டியே வெளியான மூன்று வினாக்களுக்கு இலவச மதிப்பெண்கள் வழங்கும் நடவடிக்கை மூலம் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன்,நிபுணர்கள் முன்வைத்துள்ள மூன்று பரிந்துரைகளில் இருந்து பொருத்தமான பரிந்துரையை தெரிவு செய்து அதனை உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்திற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் பெற்றோர்கள் தாக்கல் செய்த நான்கு அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலித்ததன் பின்னரே



உச்ச நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

நீதிபதிகளான யசந்த கோதாகொட, குமுதுனிவிக்கிரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த முடிவை அறிவித்துள்ளது.

இதனிடையே, வினாத்தாள்கள் வெளியானதில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர்களான ஐ.ஜி.எஸ்.பிரேமதிலக்க மூன்று மில்லியன் ரூபாவையும், சமிந்த குமார இளங்கசிங்க இரண்டு மில்லியன் ரூபாவையும் அரசாங்கத்திற்கு இழப்பீடாக வழங்க வேண்டும் எனவும் உத்தர விடப்பட்டது.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளில் மூன்று வினாக்கள் முன்கூட்டியே வெளியானதால், அனைத்து மாணவர்களுக்கும் இலவச மதிப்பெண்கள் வழங்குவதற்கான அரசாங்கத்தின் முடிவால் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாக

02




## தவறவிட்ட சாதனைகளை வென்றெடுக்க உறுதியுடன் செயல்படுவோம்



இந்த நூற்றாண்டின் தவறவிட்ட சாதனைகளை மீண்டும் நாட்டுக்கு வென்று கொடுக்கவும் மக்களின் கனவுகளை நனவாக்கவும், 2025ஆம் ஆண்டு புத்தாண்டில் மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் அர்ப்பணிக்க நடவடிக்கை எடுப்போம் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நாடும் நாட்டு மக்களும் பல தசாப்த காலமாகக் கண்ட நல்ல கனவுகள் நனவாகும் புதிய யுகத்தின் உதயத்துடன், 2025 புத்தா ண்டில் இலங்கையர்களாகிய நாம்

02

# 1,54,000 மெ.தொ அரிசி இறக்குமதி

(கனூஷியா புஷ்பகுமார்)

அரிசி இறக்குமதி செய்யும் திட்டத்தின் கீழ் 20 நாட்களுக்குள் 1 இலட்சத்து 54 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

அரிசி இறக்குமதியின் இரண்டாவது கட்டம் டிசம்பர் 24ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி நேற்று (31) நண்பகல் 12 மணி வரையான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டு சுங்கத்தால் விடுவிக்கப்பட்ட மொத்த அரிசியின் அளவு 79,000 மெட்ரிக் தொன் என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசியில் 31,000மெட்ரிக் தொன் பச்சை அரிசியும் 48,000

02



## சவால்களை முறியடித்து எதிர்காலத்தை வலுப்படுத்துவோம்!



நமது தாய்நாடு தற்போது எதிர்கொள்ளும் சவால் களை சரியாக அடையாளம் கண்டு, அவற்றை வெற்றி கொள்ளத் தேவையான ஆற்றல், வலிமை மற்றும் தொலைநோக்குடன் செயல்பட புது வருட த்தில் நாம் அனைவரும் உறுதி பூண வேண்டும். இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவதற்கான திட்டத்தை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது புதுவருட

02

## முல்லைத்தீவு விமானப்படை முகாம் இடைத்தங்கல் முகாமாக பிரகடனம்

இலங்கை விமானப்படையின் முல்லைத்தீவு முகாமை "தடுத்து வைப்பு மத்திய நிலையமாக" பிரகடனப்படுத்தும் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று நேற்று முன்தினம் (30) வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டதுடன் நேற்று (31) முதல் முல்லைத்தீவு விமானப்படைத் தளம் தடுத்து வைப்பு மத்திய நிலையமாக செயற்படுமென தெரி விக்கப்படுகிறது.

02

## சைபர் கிரைம்: சமூக ஊடகங்கள் கட்டுப்பாட்டுக்குள்




(கனூஷியா புஷ்பகுமார்)

இலங்கை பொலிஸாரின் யூடியூப் சேனல் உட்பட பல உத்தியோகபூர்வ சமூக ஊடக கணக்குகள் மீதான சைபர் தாக்குதல் தொடர்பான அண்மைய நிலைமை

02

## புலிகளால் மஹிந்தவுக்கு உயிராபத்து இல்லை

### புலிகளுடன் நெருங்கிய உறவையே பேணியிருந்தார் ; சரத் பொன்சேகா

(சுப்ரமணியம் நிஷாந்தன்)



விடுதலைப் புலிகளால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு எவ்வித உயிர் அச்சுறுத்தலும் இல்லை என பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (31) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "மஹிந்த ராஜபக்சவின் மீது புலிகளுக்கு எந்தவொரு வைராக்கியமும்

## 77ஆவது சுதந்திர தினம்: குறைந்த செலவில் நடத்த தீர்மானம்



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

இலங்கையின் 77ஆவது சுதந்திர தின நிகழ்வை குறைந்த செலவில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும்

02

## சிறுநீரக நோயாளிகளுக்கு 10,000 ரூபா

(கனூஷியா புஷ்பகுமார்)

சிறுநீரக நோயாளர்களுக்கான 7,500 ரூபா கொடுப்பனவை 10,000ரூபாவாக அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை இம்மாதம் முதல் நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக

02


## 'க்ளீன் ஸ்ரீலங்கா' இன்று ஆரம்பம்

(கனூஷியா புஷ்பகுமார்)

புத்தாண்டுக்கான கடமைகள் ஆரம்பிக்கும் இன்று (01) அனைத்து அரச நிறுவனங்களிலும் உத்தியோகபூர்வ வைபவம் இடம்பெறும் என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது. அமைச்சின் செயலாளர் எஸ்.அலோக பண்டார மூலம் அமைச்சுக்களின்

02

## கரையொதுங்கிய மியன்மார் கட்டுப்படகு



மட்டக்களப்பு வாகரையில் பால்சேனை கடற்கரையில் ஆளில்லா மியன்மார் நாட்டு படகு ஒன்று கரையொதுங்கிய நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (31) மீட்கப்பட்டுள்ளது. (கனகராசா சரவணன், உருத்திரன் )

## ஹப்புத்தளையில் விபத்து: இருவர் பலி



ஹப்புத்தளையில் நேற்று (31 வேன் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர். ஹப்புத்தளை பெரகல வீதியில்நேற்று செவ்வாய்க்கிழமை இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. 16 பயணிகளுடன் பயணித்த இந்த வேன் விபத்துக்குள்ளானதையடுத்து மேலும்

02

# சகல பாடசாலைகளும் நாளை ஆரம்பம்

( முகம்மட் முக்தார் )

நாடளாவிய ரீதியில் உள்ள சகல அரச மற்றும் முஸ்லிம் பாடசாலைகளும் 2024ம் ஆண்டின் இறுதிக் கல்வி நடவடிக்கைகளுக்காக நாளை(02) மீண்டும் திறக்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2024 ஆம் கல்வியாண்டின் இறுதி கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக திறக்கப்படும் மேற்படி பாடசாலைகளின் 2024ம் ஆண்டுக்கான சகல கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் இம்மாதம் 24ம் திகதியுடன் முடிவுக்கு கொண்டு வரப்படுவதாகவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது . இக்காலப்பகுதிக்குள்

02

# நிலந்தி கொட்டஹச்சி எம்.பி. சி.ஐ.டியில் முறைப்பாடு

(கனூஷியா புஷ்பகுமார்)

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டஹச்சி மீது சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பியதாகக் கூறி அவருடைய சட்டத்தரணி மூலம் அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

20,000 ரூபாய் செலுத்தி நிலந்தி கொட்டஹச்சியுடன் ஹோட்டல் ஒன்றிற்கு சென்றதாக, நபர் ஒருவர் சமூக வலைத்தளத்தில் அவதூறான பதிவுகளை வெளியிட்டிருந்ததாக சட்டத்தரணி நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இதனால் நிலந்தி கொட்டஹச்சிக்கு ஏற்பட்ட அவதூறுகள் மற்றும் அபகீர்த்திக்காக நீதியை நிலை நாட்ட வேண்டும் என மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கோரியுள்ளார்.

இது தொடர்பில், சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், தனது மனுதாரருக்கு எந்தவிதமான தவறான நடத்தைகளும் இல்லை என்றும் அந்த நபரை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை என்றும் கூறியமை குறிப்பிடத்தக்கது.

# பணவீக்கம் அதிகரிப்பு

2004ஆம் ஆண்டின் அடிப்படையில் பணவீக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI) மூலம் அளவிடப்பட்ட பணவீக்கத்தின் வீதமே அதிகரித்துள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலும் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு நவம்பவர் மாதத்தில், பணவீக்க வீதம் -2.1 ஆக காணப்பட்ட நிலையில் டிசம்பர் மாதம் -1.7 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, நவம்பர் மாதத்தில் 0.6 வீதமாக பதிவான உணவுப் பணவீக்கம் டிசம்பர் மாதத்தில் 0.8 வீதமாக அதிகரித்துள்ளது.

மேலும் நவம்பர் மாதத்தில் -3.3 வீதமாக காணப்பட்ட உணவு அல்லாப் பணவீக்கம் டிசம்பர் மாதத்தில் -3.0 வீதமாக உயர்வடைந்துள்ளது.

# வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் 7 வயது சிறுவன் பலி

( கி.வசந்தன் )

வவுனியா, பாவற்குளம் பகுதியில் துவிச்சக்கரவண்டி மீது பேருந்து மோதியதில் 7 வயது சிறுவன் ஒருவர் மரணமடைந்துள்ளதாக உளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (31)மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா, பாவற்குளம், படிவம் இரண்டு பகுதியில் சாரதி பேருந்தை நிறுத்திய சாரதி மீண்டும் அதை முன்னோக்கி செலுத்திய போது துவிச்சக்கர வண்டியில் பயணித்த இரு சிறுவர்கள் வீதியை ஊடறுக்க முற்பட்ட போது பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானார்கள். இதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த 7 வயதுடைய அப்துல் மஜித் உமர் என்ற சிறுவன் மரணமடைந்துள்ளார்.

# அரச சேவையில் ஆட்குறைப்பு இல்லை



அரசாங்க உத்தியோகத்தர்களை குறைப்பது தொடர்பிலான எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லையென சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், அரச சேவையில் மக்களை விளைத்திறனுடனும் வினைத்திறனுடனும் ஈடுபடுத்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. அரசாங்க உத்தியோகத்தர்களை குறைப்பது தொடர்பிலான எந்தெவொரு எதிர்பார்ப்பும் இல்லை.

சுகாதார அமைச்சின் கீழ்நிலையில் உள்ள பெரும்பாலான ஆட்சேர்ப்புகள் சேவை தேவைகளை விட அரசியல் தேவைகளுக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன

எவ்வாறு ஆட்சேர்ப்பு நடந்தாலும், அரசுப் பணியில் இணைந்து அதன் மூலம் வாழ்க்கையைத் திட்டமிட்டு, சிலர் வங்கிக் கடன் பெற்றிருக்கிறார்கள் என்றார்.

## தரம் 5....

மனுதாரர்கள் தங்களது மனுக்களில் குறிப்பிட்டிருந்தனர்.

தங்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பு வழங்குமாறு கோரி இந்த மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அத்துடன், மூன்று வினாக்களுக்கும் முழு மதிப்பெண் வழங்க எடுக்கப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்து, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த உத்தரவிடுமாறும் மனுதாரர்கள் உச்ச நீதிமன்றத்திடம் மேலும் கோரியிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த வேண்டிய அவசியமில்லை என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர கடந்த ஒக்டோபர் 14ஆம் திகதி தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சைபர்...

குறித்து பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை பொலிஸாரின் உத்தியோகபூர்வ முகநூல், டிக்டொக், இன்ஸ்டாகிராம், யூடியூப் மற்றும் ஒ தள பதிவுகள் நேற்று முன்தினம் (30)மாலை சைபர் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தன.

அதன்படி, தற்போது உத்தியோகபூர்வ முகநூல், டிக்டொக், இன்ஸ்டாகிராம் மற்றும் X கணக்குகள் தற்போது மீண்டும் இலங்கை பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. எனினும், பொலிஸ் யூடியூப் சேனல் இன்னும் இலங்கை பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. அதனை மீட்கும் பணியில் தகவல் தொழில்நுட்ப பிரிவு அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

இந்த இணையத் தாக்குதல் தொடர்பில் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## 1, 54 ஆயிரம்...

தொன் நாட்டு அரிசியும் உள்ளடங்குவதாக சுங்க ஊடகப் பேச்சாளர், மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, 12,000 மெட்றிக் தொன் அரிசி கப்பல் மூலம் வந்துள்ளதுடன், அந்த கையிருப்பும் விரைவில் விடுவிக்கப்பட உள்ளது.

அரிசி இறக்குமதி தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க கடந்த 24ஆம் திகதி வெளியிட்டார்.

இதனால் அரிசி இறக்குமதிக்கு அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முதல் கட்ட அரிசி இறக்குமதியின் கீழ், இம்மாதம் 10ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை 67,000 மெட்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

## 77ஆவது...

உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ.எச்.எம்.எச். அபயரத்ன, இந்நிகழ்வு தேசத்தின் கௌரவத்தை பிரதிபலிக்கும் வகையில் பெருமையுடனும் கம்பீரத்துடனும் இடம்பெறும் என தெரிவித்துள்ளார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில்(30) நடைபெற்ற 77 ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்திற்கான முதலாவது ஏற்பாட்டுக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், 77ஆவது சுதந்திர தின நிகழ்வை குறைந்த செலவில் கொண்டாடுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த வருட நிகழ்வுக்கு 107 ரூபாய் மில்லியன் செலவிடப்படுள்ளது. இந்த ஆண்டு முடிந்தவரை செலவுகளை குறைக்க ஆலோசனைகளை வழங்கியுள்ளோம்.

அத்துடன், சுதந்திர தின நிகழ்வை பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதியை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சவால்களை...

வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவ் வாழ்த்துச் செய்தியில்...

கடந்த காலத்தைப் போல குறுகிய இன, மத கருத்துக்களால் பிளவுபட்ட அரசியல் திட்டங்கள் மீண்டும் தலைதூக்காமல் இருப்பது மிக முக்கியம். அத்துடன் கடந்த நான்கு வருடங்களாக நாட்டு மக்கள் எதிர்கொண்ட நிச்சயமற்ற தன்மை, ஏமாற்றங்களை முடிவுக்கு கொண்டுவந்து, மக்கள் தாய்நாட்டில் தங்கியிருக்க ஏதுவான பொருளாதார, அரசியல், சமூக சூழலை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

இதில் நாம் செய்ய வேண்டியது அமைதியின்மையை இல்லாதொழித்து நிம்மதியை வெற்றி பெறச்செய்வதற்கான பாதையை சரியாக தெளிவுபடுத்திக் கொள்வதாகும். நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் சிதைந்துள்ள வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப புதிய பொருளாதார திட்டமும் செயல்முறையும் தேவை என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே நாட்டின் எதிர்காலத்திற்காக அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னெடுப்புகளை வலுப்படுத்த புது வருடத்தில் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளால்...

இல்லை. போர் இடம்பெற்ற தருணத்திலும் அவருக்கு எவ்வித உயிர் அச்சுறுத்தலும் இருக்கவில்லை. மஹிந்த ராஜபக்ச மீது குண்டுத் தாக்குதலை நடத்தவோ அல்லது வேறு விதமான தாக்குதலை நடத்தவோ எந்தவொரு தீவிரவாதியும் முற்பட்டிருக்கவில்லை என தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ச தனியாகவா யுத்தம் செய்தார்? நாம் யுத்தம் செய்யவில்லையா? என கேள்வி எழுப்பிய அவர், யுத்தத்துக்கு தலைமை தாங்கிய இராணுவத் தளபதியான தனது முழுமையான பாதுகாப்பு 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறு வெளியாகுவதற்கு முன்னரே நீக்கப்பட்டதாக குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வெலிகடை சிறையில் என்னை அடைத்த தருணத்தில் புலிகள் அமைப்பை சேர்ந்த தீவிரவாதியொருவர் சிறையில் இருந்தார். அத்தருணத்தில் எனக்கு எவ்வித விசேட பாதுகாப்பும் அளிக்கப்படவில்லை. பின்னர் நீதிமன்றத்துக்கு அழைத்து வந்த தருணத்தில் இராணுவத் தலைமையகத்தில் என்மீது தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தவந்திருந்த முரிஸ் என்ற தீவிரவாதியும் நானும் ஒரே பங்கில்தான் அமர்ந்திருந்தேம். அப்போது எனக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருக்கவில்லையா?

அதனால் மஹிந்த ராஜபக்சவிற்கு எப்போதும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த மாட்டார்கள். மஹிந்த ராஜபக்ச, பிரபாகரனுடன் சமதான பேச்சுகளை நடத்தி யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவருவதாகவே ஆட்சிக்கு வந்தார்.போர் முடிவதற்கு 3 மாதங்கள் இருந்த தருணத்தில் போர் நிறுத்ததை அறிவித்தார். பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் தப்பித்துச் செல்லவே அவர் அந்த நடவடிக்கையை எடுத்திருந்தார்.

போர் நிறுத்த அறிவிப்பு காரணமாக மூன்று மாதங்கள் போர் பின்நோக்கிச் சென்றதுடன், இராணுவத்தினரும் 5 கிலோ மீற்றர் பின்நோக்கிச் செல்லும் நிலை ஏற்பட்டது. மஹிந்த ராஜபக்ச புலிகளுடன் நெருங்கிய உறவை பேணியிருந்தார். அதனால் புலிகளால் அவரது உயிருக்கு ஆபத்து இல்லை என்றும் கூறினார்.

## க்ளீன் ஸ்ரீலங்கா...

செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டப்பூர்வ சபைகளின் தலைவர்களுக்கு அறிவிக்கும் சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

புதிய வருடத்தில் “க்ளீன் ஸ்ரீலங்கா” தேசிய வேலைத்திட்டத்துடன் உத்தியோகபூர்வ செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுத்துறை மற்றும் தனியார் துறையுடன் இணைந்து தூய்மையான இலங்கை திட்டத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று (01) ஜனாதிபதி அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதற்கமைய அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களும் முழு அரச சேவை ஊழியர்களின் பங்களிப்புடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெறும் பணிகளுக்கு சமாந்தரமாக தமது பணியிடங்களில் பணிகளை ஆரம்பிக்க வேண்டுமென பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

“க்ளீன் ஸ்ரீலங்கா” நிகழ்ச்சித் திட்டத்தின் தேசிய வைபவத்தை அனைத்து அரச மற்றும் தனியார் இலத்திரனியல் அலைவரிசைகள் ஊடாக ஒளிபரப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், அனைத்து அரச நிறுவனங்களின் ஊழியர்களும் இதனைக் காணும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து அரச ஊழியர்களும் “க்ளீன் ஸ்ரீலங்கா” உறுதிமொழியை வழங்க நேரலையில் இணைய வேண்டும் என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தனது சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

## முல்லைத்தீவு...

கடற்படையினரால் அண்மையில் மீட்கப்பட்ட 103 மியன்மார் ரெஹிங்கிய அகதிகள் முல்லைத்தீவில் உள்ள விமானப்படை முகாமில் தற்காலிகமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய மிரிஹான தடுப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த போதிலும், மிரிஹான தடுப்பு முகாமில் போதிய தங்குமிட வசதிகள் இல்லாததால், இந்த அகதிகளை முல்லைத்தீவு விமானப்படைத் தளத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## ஹப்புத்தளையில்...

14 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து ஏற்பட்டதும் உடனடியாக காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய பெண் மற்றும் 65 வயதுடைய ஆண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

பிரேக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறினால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மண்மேட்டில் கல்லொன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## சகல பாடசாலைகள்...

மாணவர்களுக்கான வகுப்பேற்றப் பரீட்சைகள் யாவும் நடாத்தப்பட்டு வகுப்பேற்றங்களை வழங்குமாறும் பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

2025 ம் ஆண்டுக்குரிய பாடசாலைகளுக்கான புதிய தவணை மற்றும் கல்வி நடவடிக்கைகள் இம்மாதம் 27 ம் திகதி ஆரம்பமாகிறது.

புதிய கல்வியாண்டில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் தேசிய நிகழ்வு எதிர்வரும் 31ம் திகதி நாடுதழுவிய ரீதியில் பாடசாலைகளில் இடம்பெறுகிறது.

மேலும் மாணவர்களுக்கான 2025 ம் வருடத்திற்கான காலை உணவு வழங்கும் செயற்பாடுகள் தேசிய பாடசாலை அல்லாத மாகாண பாடசாலைகளில் எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெறுகிறது.

இதேவேளை அரசினால் புதிதாக அறிவிக்கப்பட்ட அஸ்வெசும மற்றும் வருமானம் குறைந்த குடும்பங்களின் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணக் கொள்வனவிற்கான அரச கொடுப்பனவு 6,000 ரூபா மாணவர்களின் பெற்றோரது வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

## தவறவிட்ட...

அடியெடுத்து வைக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய நான்கு திசைகளையும் இணைத்து அனைத்து மக்களின் நம்பிக்கையையும் பெற்று 2024ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க எம்மால் முடிந்தது. அதற்கிணங்க, மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த ஆட்சியொன்றை உருவாக்கும் நோக்கில் அன்றிருந்த அரசியல் கலாசாரத்தில் பாரிய மாற்றத்தை மேற்கொண்டு, மக்கள் ஆணையின் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் தற்போது துரிதமாக செயற்பட்டு வருகின்றோம்.

கிராமிய வறுமையை ஒழித்தல், “க்ளீன் ஸ்ரீலங்கா“ திட்டம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் ஆகியவை நாட்டின் முன்னணி அபிவிருத்தித் தேவைகளாக நாம் அடையாளம் கண்டுள்ளோம். அந்தப் பின்னணியில் சமூக, சுற்றாடல் மற்றும் நெறிமுறை புத்தெழுச்சியின் ஊடாக சமூகத்தை மேலும் மேம்பட்ட நிலைக்கு உயர்த்தும் நோக்கில் ”க்ளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டம் புத்தாண்டு உதயத்துடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த பரிமாற்றரீதியான அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஊடாக நாடென்ற ரீதியில் 2024 ஆம் ஆண்டில் நாம் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்த இருக்கிறோம். அனைவருக்கும் ”வளமான நாடு – அழகான வாழ்வை” பெற்றுக் கொடுப்பதற்காக புதிய மனப்பாங்குகளை மேம்படுத்தி,புதிய உறுதிப்பாடுகளை மனதில் கொண்டு சகோதரத்துவத்துடன் முன்னோக்கி வருவதற்கு 2025 புதுவருட உதயத்துடன் சிறந்த வாய்ப்பு உருவாகியிருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன்.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் நேய அரசாங்கத்தை உருவாக்கி, அனைத்து மக்களும் ஒன்றிணைந்த அபிவிருத்தியடைந்த இலங்கை பற்றிய கனவை நனவாக்கும் வாய்ப்பு உங்களுக்கும் எமக்கும் கிடைத்துள்ளது. விட்டுக்கொடுக்க முடியாத இந்தப் பாரிய பொறுப்பு நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பு குறித்து எங்களுக்கு நல்ல புரிதல் உள்ளது. இந்த நூற்றாண்டின் தவறவிட்ட சாதனைகளை மீண்டும் நாட்டுக்கு வென்று கொடுக்கவும் மக்களின் கனவுகளை நனவாக்கவும்,2025ஆம் ஆண்டு புத்தாண்டில் மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் அர்ப்பணிக்க நடவடிக்கை எடுப்போம்.

தேசிய மறுமலர்ச்சிக்காக எங்களுடன் இணைந்து பங்காற்றும் உங்கள் அனைவருக்கும் செழுமையும் ஒற்றுமையும் புதிய நம்பிக்கையும் நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

## சிறுநீரக...

வலுவூட்டல் அமைச்சு அறிவித்துள்ளது.

சிறுநீரக நோயாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை அறிவித்துள்ளது.

குறித்த அறிக்கையில் டிசம்பர் மாதத்தின் பின்னர் கொடுப்பனவு குறைக்கப்பட உள்ளதாக வெளியான தகவல்கள் முற்றிலும் பொய்யான மற்றும் அடிப்படையற்றவை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த நாட்களில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், அதிகாரமளிக்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் பிராந்திய செயலக மட்டத்தில் தகவல் புதுப்பித்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனூடாக மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளில் எவ்வித குறைப்பும் மேற்கொள்ளப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகத்தின் தகவல்களின்படி, நாட்டில் தற்போது 47,244 சிறுநீரக நோயாளிகள் இருப்பதாகவும், எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம், எனவே இந்த தகவலை புதுப்பிக்க வேண்டியது மிகவும் அவசியம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இதன் காரணமாக தற்போது சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு பெறும் எவருக்கும் கொடுப்பனவு எவ்விதத்திலும் குறைக்கப்பட மாட்டாது என அமைச்சு விடுத்துள்ள

# சிவப்பு அரிசி தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு; அரசு உறுதி



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

சிவப்பு அரிசிக்கு நாட்டில் நிலவும் தட்டுபாட்டை நீக்க விரைவில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகச்சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது அரிசித் தட்டுபாடு தொடர்பில் கேள்வியெழுப்பிய ஊடகவியலாளர்களுக்கு பதில் அளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, “நாட்டில் அரிசிக்கு நிலவிய தட்டுப்பாடு காரணமாகவே அரிசி இறக்குமதிக்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியது. அரிசி இறக்குமதிக்கான கால எல்லை டிசம்பர் 30ஆம் திகதி முதல் ஜனவரி 10ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இதுவரை 77 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 11 ஆயிரம் மெற்றிக் தொன் துறைமுகத்தில் உள்ளது. அவையும் நாளை அல்லது நாளை மறுதினம் விடுக்கப்படும். குறிப்பிடத்தக்களவு அரிசி நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. என்றாலும், அவற்றை விநியோகிக்கும் பொறிமுறையில் சில பிரச்சினைகள் இருக்கலாம். குறிப்பாக சிவப்பு அரிசிக்கு தட்டுப்பாடு உள்ளது. அந்தப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும்.

ஜனவரி நடுப்பகுதியில் உள்நாட்டு விவசாயிகளின் அரிசி சந்தைக்கு கிடைக்கப்பெறும். அந்த விடயத்தையும் கவனத்தில் கொண்டுதான் நாம் தீர்மானங்களை எடுத்து செயல்பட்டு வருகிறோம். அரிசி இறக்குமதி செய்யப்பட்டு அவற்றை முறையாக விநியோகிக்கும் பொறிமுறையொன்றை பேண எதிர்பார்ப்பதுடன், சதொசவில் குறிப்பிடத்தக்களவு அரிசியை கையிருப்பில் வைத்திருக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவற்றுக்கு மத்தியில் உள்நாட்டு விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் அரிசி விலையை பேணவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த போகத்தில் இருந்து விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும். உள்நாட்டு விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்பதே அரிசிக்கான வரி குறைக்கப்படாமைக்கு காரணம். வரி குறைப்பு செய்தால் உள்நாட்டு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் நெல்லை வழங்க முடியாது.” என்றார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 17ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்:** இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது.

**ரிஷபம்:** இன்று நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம்.

**மிதுனம்:** நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள்.

**கடகம்:** இன்று எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

**சிம்மம்:** இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும்.

**கன்னி:** இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள்.

**துலாம்:** இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன.

**விருச்சிகம்:** இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது.

**தனுசு:** இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

**மகரம்:** இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள்.

**கும்பம்:** இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

**மீனம்:** ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று அதிகாலை 04:48 வரை பிரதமை பின்பு துவிதியை.

**நட்சத்திரம்:** இன்று அதிகாலை 01:38 வரை பூராடம் பின்பு உத்திராடம்.

**யோகம்:** அமிர்த,சித்த.

**சந்திராஷ்டமம்:** மிருகசீரிஷம், திருவாதிரை.

**சூலம்:** வடக்கு.

**இராகு காலம்:** 12:00 PM முதல் 01:30 PM வரை.

**குளிகை:** 10:30 AM முதல் 12:00 PM வரை.

**எமகண்டம்:** 07:30 AM முதல் 09:00 AM வரை.

## மறைந்த இந்திய பிரதமருக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரங்கல்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (31) கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் மறைந்த இந்திய முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் அவர்களுக்கு தனது இரங்கலைத் தெரிவித்தார். மறைந்த கலாநிதி மன்மோகன் சிங்கின் குடும்பத்தினருக்கும், இந்திய அரசாங்கத்திற்கும் தனது இரங்கலை இதன்போது தெரிவித்த அவர் அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் பதிவேட்டிலும் கையொப்பமிட்டார்.

“திகன கலவரம்” மனித உரிமைகள் ஆணைக்குழுவின்

## அறிக்கை வெளியாகாததால் பாதிக்கப்பட்டவர்கள் ஏமாற்றம்

மரணம், நிரந்தர அங்கவீனம் மற்றும் பல கோடி பெறுமதியான சொத்துக்களுக்கு சேதத்தை ஏற்படுத்திய கண்டி, திகன மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மலையக முஸ்லிம்களுக்கு எதிராக ஆறு வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட இனவாத கலவரம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை வாக்குறுதியளிக்கப்பட்ட நாளில் வெளியிடப்படாமை குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். திகன கலவரத்தில அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினருக்கும் தொடர்பு இருந்தது என்பதற்கான நம்பகமான ஆதாரங்களை 2024 ஜுலையில் ஒரு ஆவணப்படம் வெளிப்படுத்திய பின்னர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் வெளியிடப்படும் என உறுதியளித்தது.

2018ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பிலான விசாரணை அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிடாமை தொடர்பிலான “திகன முஸ்லிம்களுக்கு எதிரான கலவரம் நடந்து 6 வருடங்கள்: நீதி எங்கே?“ என்ற ஆவணப்படம் கொழும்பில் காட்சிப்படுத்தப்பட்டதை அடுத்து, இந்த வருடத்திற்குள் விசாரணை அறிக்கையை வெளியிட எதிர்ப்பார்ப்பதாக ஆணையாளர் கலாநிதி கெஹான் குணதிலக பிபிசியிடம் தெரிவித்திருந்தார்.

வாக்குறுதியளித்தமைக்கு அமைய 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் அறிக்கை வெளியிடப்படாமையால், பாதிக்கப்பட்ட இஸ்லாமிய சகோதரர்கள் சார்பாக நேற்றுமுன்தினம் (30) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கடிதம் எழுதிய கண்டியைச் சேர்ந்த ஊடகவியலாளர் எம்.ஐ.எம். முசாதிக், சம்பவம் நிகழ்ந்த காலத்தில் இருந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பலமுறை நினைவூட்டியும் இந்த வருட இறுதிக்குள் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படவில்லை என வலியுறுத்தியுள்ளார்.

மலையக முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத கலவரம் இடம்பெற்று ஏழு வருடங்களாகின்ற இந்த தருணத்தில் புதிய அரசாங்கத்தின் கீழாவது குறித்த அறிக்கையை விரைவில் பகிரங்கப்படுத்துமாறும் ஊடகவியலாளர் தனது கடிதத்தில் கோரியுள்ளார்.

## அனைவருக்கும் வெற்றிகள் நிறைந்த ஆண்டாகட்டும்



மனிதநேயம் முதன்மை பெற்று அனைவருக்கும் வெற்றிகள் நிறைந்த ஆண்டாக மலர்ந்துள்ள புத்தாண்டு திகழ வேண்டுமென பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தனது புது வருட வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

“மலர்ந்துள்ள புது வருடம், இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் அமைதியும் , மகிழ்ச்சியும், ஆரோக்கியமும் நிறைந்த செழிப்பான ஆண்டாகவும், மனிதநேயம் முதன்மை பெற்று

”வளமான நாடு, அழகான வாழ்க்கை அனைவருக்கும் கை கூடும்,வாழ்வில் வெற்றிகள் நிறைந்த ஆண்டாக திகழ எனது உளமார்ந்த புது வருட நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்” என வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னையில் புத்தகக் கண்காட்சி



சென்னை,நந்தனம் வை.எம்.சி.ஏ. மைதானத்தில் 48-வது சென்னை புத்தகக் கண்காட்சி கடந்த 27.12.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. 900 அரங்குகளைக் கொண்ட இந்த புத்தகக் காட்சி தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினரால் நடத்தப்படுகிறது.

டிசம்பர் 27தொடங்கி ஜனவரி 12 வரை நடைபெற உள்ள இப் புத்தகக் கண்காட்சி பெரியவர் தொடங்கி சிறுவர் வரை என எல்லோரும் வாசிக்கும் வகையில் ஏராளமான தலைப்புகளில் இலட்சக்கணக்கான புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அடுத்தடுத்த தினங்களில் தொடர்ந்து எழுத்தாளர்கள், கவிஞர்கள் பங்குபெறும் இலக்கிய கூட்டங்கள், புத்தக வெளியீட்டு விழாக்கள், பட்டிமன்றங்கள், பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகளும் நடைபெற உள்ளன.

## மட்டக்களப்பில் வீட்டுவேலை தொழிலாளர் சம்பள பட்டியல் வெளியீடு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் வீட்டுவேலை தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் நாள் ஒன்றிற்கு 8 மணித்தியாலத்திற்கு 2000-ரூபாவாக நிர்ணயித்து அது தொடர்பான சம்பளம் பட்டியல் ஒன்றை வீட்டு வேலை தொழிலாளர் சங்கம் நேற்று செவ்வாய்க்கிழமை (31) வெளியிட்டு வைத்தது.

மட்டக்களப்பு டயஸ் லேனிலுள்ள வீட்டுவேலை தொழிலாளர் சங்க காரியாலயத்தில் நேற்று செவ்வாய்கிழமை (31) இடம்பெற்ற ஊடகவியலாள் மாநாட்டில் சம்பள பட்டியலை சங்க செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் வெளியிட்டுவைத்து இவ்வாறு தெரிவித்தனர்.

மாவட்டத்தில் 450 மேற்பட்ட வீட்டுவேலை தொழிலாளர்கள் சங்க உறுப்பினர்களாக இருந்துவருகின்றனர் இந்த நிலையில் இந்த வீட்டுவேலை தொழிலாளர்களுக்கு தொழில் வழங்குபவர்கள் ஒரு வேலைக்கு அழைத்து ஏனைய வேலைகளை வாங்கி கொண்டு அவர்களின் உழைப்பிற்கு ஏற்ற சம்பளங்களை வழங்காது சாப்பாட்டு பார்சலை வழங்கி அத்துடன் குறைந்த ஊதியத்தை வழங்கி அவர்களை அவமதித்து நடாத்தி வருகின்றனர். இவ்வாறு வீட்டு வேலை தொழிலாளிகள் மிகவும் பாதிக்பட்டுள்ளனர் எனவே அவர்களின் உழைப்பிற்கு ஏற்ற சம்பளத்தை பெற்றுக் கொள்வதற்காக சம்பள பட்டியல் ஒன்றை நிர்ணயித்துள்ளோம் அதற்கமைய 8 மாணிநேர வேலைக்கு 2000 ரூபாவும், 4 மணித்தியால வேலைக்கு 1500 ரூபாவும், ஒருமணிநேர வேலைக்கு 500ரூபாவும், 8 மணித்தியாலயத்திற்கு மேல் வேலை செய்தால் ஒரு மனித்தியாலயத்திற்கு 250 ரூபாவும்,

தங்கி வேலை செய்வேருக்கு மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவும் தொழில் வழங்குபவர்கள் வழங்கப்படவேண்டும் என சம்பள பட்டியல் ஒன்றை நிர்ணயித்து அதனை இன்று துண்டுபிரசுரம் மூலமாக பொது இடங்களில் விநியோகிக்க உள்னோம். எனவே எமது சங்கம் கண்டியை தலைமையமாக கொண்டு பல மாவட்டங்களில் இயங்கி வருகின்றது இந்த சங்கத்திலுள்ள வீட்டு வேலை தொழிலாளர்களின் எரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம் எனவே இந்த சங்கத்தில் இணையாத வீட்டுவேலை தொழிலாளர்கள் இணைந்து கொள்ளமுடியும் என்றனர்.

இதனையடுத்து சம்பள பட்டியல் துண்டு பிரசுரத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் இடம்கையளித்து வெளிட்டுவைத்த பின்னர் துண்டுபிரசுரங்களை பொதுமக்களிடம் விநியோகத்தனர்.

## அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் இன்று புதன்கிழமை 5.30 மணிக்கு ஊடகவியலாளர் ஜயாத்துரை கஜமுகன் “ நுகர்வுத் திறன்சார் ஊடக அரசியல் “ என்ற தொனிப்பொருளில் உரையாற்றுகிறார்.

சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் நடராஜா சிறீரஞ்சன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.






## பிங்கிரிய தொழிற்சாலை வளாக சம்பவம்; சந்தேக நபர்கள் இருவருக்கு விளக்கமறியல்

(கனூஷியா புஷ்பகுமார்)

பிங்கிரிய தொழிற்சாலை வளாகத்தில் தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் முகங்கொடுத்த சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் (30) கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் ஹெட்டிபொல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது,இருவரையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் ஏ.சி.ஏ.சலாம் உத்தரவிட்டார். அன்றைய தினம் சந்தேக நபர்கள் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜேசிறி பஸ்நாயக்க குளியாபிட்டிய குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு செய்த முறைப்பாட்டிற்கு அமைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

குருநாகல் பிங்கிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள ஆடை தொழிற்சாலை வளாகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் கிஹான் பெர்னாண்டோ மற்றும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜேசிறி பஸ்நாயக்க ஆகியோர் நேற்று முன்தினம் பிற்பகல் அங்கு சென்றிருந்தனர்.

குறித்த தொழிற்சாலை ஊழியர்களின் போக்குவரத்து வசதிகள் தொடர்பான பிரச்சினை குறித்து கலந்துரையாட அவர்கள் அங்கு சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறாயினும், நிறுவனத்திற்குள் ஒரு மணி நேரம் நீடித்த கலந்துரையாடலுக்குப் பிறகு, வெளியே வந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொழிற்சாலை ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் ஒரு குழுவினர் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## ‘முறைமை மாற்றம்’ செய்ய தற்துணிவு வேண்டும்

21 ஆம் நூற்றாண்டில் 25 ஆண்டுகளில் கால் பதிக்கிறோம். ஜனவரி முதலாம் திகதியோடு 2025 ஆம் ஆண்டு பிறக்கிறது. கிரிகோரியன் கலண்டர் இதனை நமக்கு ஞாபகம் ஊட்டுகிறது.

பழையன கழிதலும் புதியன புகுதலும் புத்தாண்டின் உளமார்ந்த சிறப்பு. இலங்கை வாழ் சகல மக்களும் இன்று புதிய ஆண்டை வரவேற்று மகிழ்கின்றனர். ஆங்கில ஆண்டு பிறப்பு என்றாலும், சர்வ மதங்களும் பொதுவான தினமாகவே மகிழ்ச்சி ஆரவாரங்களோடு இன்புறுகின்றனர்.

வழமையான எதிர்பார்ப்புகளுடன் இந்த ஆண்டும் பிறந்திருக்கிறது. உண்பதும் உடுப்பதும் அடிப்படை தேவைகள் போல், வாழ்விடமும் மானிடப் பிறவியின் அடிப்படை.இவைகள் மூன்றும் வாழ்வியலின் ஆதார சுருதிகள்.

அதிகாரத்தில் இருந்தவர்களின் ஆணவமும் ஊழலின் உச்சமும் நாட்டை நாசமாக்கி இருக்கிறது. விடைபெற்றுச் சென்ற ஆண்டு- நம் நாட்டின் வாழ்வியலையே மாற்றி அமைத்தது. பொருளாதாரம் என்பது அனைத்துக்கும் அடிப்படை என்பதை மறந்த, அரசியல் தலைவர்களால், தூக்கிப்பிடிக்கப்பட்ட இனவாதத்தால், அடிப்படைகளை இழந்தோம் என்பதை இன்றைய நன்னாளில் ஞாபகம் ஊட்ட வேண்டி உள்ளது. படிப்பினைகளே நமக்கு

படிக்கற்கள் என்பதை மறந்து விடாதீர்கள். “பட்டோம் தேறினோம்” என்ற நிலையில் இல்லாமல், நவீனத்தை நோக்கிய புதிய மாற்றங்களோடு, நம் பணிகளை முன்னெடுப்பது தான் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகுக்கும்.

மாற்றம் ஒன்றே வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும். இதனை அடித்துச் சொல்லியே மக்கள், அரசுக்கு ஆணை வழங்கினர். System change - “இந்த முறைமை மாற்றம” முழுமையானால் மாத்திரமே விடிவு பிறக்கும். “மூன்று மாதங்களில், நாட்டில் ஸ்திரநிலையை ஏற்படுத்தி விட்டோம்” என அரசாங்கம் மார்பு தட்டுகிறது. என்ன மாற்றம் என்பது தான் புரியாமல் இருக்கிறது. நாடாளுமன்றத்தில் கதிரைகளை மாற்றம் செய்வது முறைமை மாற்றமல்ல.

நாட்டில் ஜனநாயக கட்டமைப்பில் உள்ள சகல மட்டங்களிலும் மாற்றம் செய்யப்பட வேண்டும். அது நடந்ததாக இல்லை. அதிகாரிகள் தடையாக இருக்கிறார்கள் என்று சொல்லி, அரசு தப்பி விட முடியாது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்துவிட்டது என்பதற்காக, வாக்குறுதிகளை மறப்பது நல்லதல்ல. பண்டிகைக்கால விலை அதிகரிப்புகளை சமாளிப்பதில் அரசு ஓரளவு திருப்தி

கொள்ள முடிந்தாலும், வர்த்தக மாபியாக்களுக்கு இன்னும் கடிவாளம் இடமுடியாத நிலைதான் தொடர்கிறது. இவர்களது விடயத்தில், அரசுக்கு நடைமுறை சிக்கல் இருக்கலாம். அவைகளை மேவி தீர்வு காண்பதுதான் அரசின் பணியாக இருக்க வேண்டும். அவர்களும் வேண்டும் இவர்களும் வேண்டுமென்ற தடவல் போக்கு, பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வை பெற்று தராது.

இதேபோல, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அவல நிலை வடக்குக் கிழக்கில் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி, வருடக் கணக்கில் போராட்டம் நடத்தி வருபவர்களில் பெரும்பாலானவர்கள் மரணத்தை தழுவி விட்டார்கள். எஞ்சி இருப்பவர்களும், குற்றுயிராகவே காலத்தை கழிக்கிறார்கள். இந்தப் பிரச்சனைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. 2009 ஆம் ஆண்டிலிருந்து பதவியிலிருந்த அரசாங்கங்கள், கண்டு கொண்டதாக இல்லை. மரணச் சான்றிதழையும் நட்ட ஈடும் கொடுத்து பிரச்சினையை தீர்க்கலாம் என்று நினைக்கிறது அரசு. நீதி விசாரணையைத் தவிர, போராட்டக்காரர்கள் எதையும் ஏற்பதாக இல்லை. ஆட்சிப் பீடத்தில் இருக்கின்ற இந்த அரசும் மூன்று மாதமாகியும் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. மாற்றம் செய்வோமென ஆட்சியை கையேற்றவர்கள், இந்த மனிதாபிமான விடயத்திலும் தீர்வு காண வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடயம், கடந்த கால அரசாங்க ங்களினால், வேண்டுமென்றே இழுத்தடிக்கப்பட்டன. விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில், கைது செய்யப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டவர்களும், சந்தேக நபர்களாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டு இருப்பவர்களும் 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு மேல் சிறையிலே வாடுகிறார்கள். புலிகளின் தளபதிகளாக இருந்த பலர் (கருணா அம்மான், பிள்ளையான் உட்படப் பெருந்தலைவர்கள்) சுதந்திரமாக நடமாடுகின்ற போது, சந்தேக நபர்களாக பிடிக்கப்பட்டவர்களை வருடக் கணக்கில் அடைத்து வைத்திருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? என்று தெரியவில்லை. ஆகவே, அரசியல் கைதிகளின் பிரச்சனையை, பேரினவாத பௌத்த சிந்தனையோடு கையாளாமல், யதார்த்தத்தோடும் மனிதாபிமானத்தோடும் அணுகுவது தான் ஆரோக்கியமாக இருக்கும்.

விடுதலைப் புலிகளுக்கு இயக்கம் முழுமையாக அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையில், சந்தேக நபர்களை பிடித்து வைத்திருப்பது அரசியல் கோழைத்தனம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அரசியல் கைதிகளே இலங்கையில் இல்லை என்று, முன்னாள் நீதி அமைச்சர் ஒரு காலகட்டத்தில் அறிவித்தார். பின்னர், நீதிமன்றத்தில் நடத்தி விடுவிக்கப் போவதாகவும் தெரிவித்தார். இந்த மாறுபட்ட அரசியலில், அப்பாவிகள் பலிக்கடாவாகி இருக்கிறார்கள் என்பதை சர்வதேசம் என்று புரிந்து கொண்டுள்ளது.

ஆகவே, மாற்றத்தை எதிர்பார்க்கின்ற தமிழர்கள், கைதிகளின் வாழ்க்கையில், புது வாழ்வை கொடுக்குமா? புதிய அரசுக்கு இது ஒரு சவாலாக இருந்தாலும், பேரினவாத சிந்தனைகளோடு செயல்படாமல், இடதுசாரி சிந்தனையின் தற்துணிவோடு தீர்வுகளை எட்ட வேண்டும்.

தமிழர்பிரச்சனைதொடர்பில்,இந்தஅரசுஉத்தியோபூர்வமாகஎதுவும் சொல்லவில்லை. என்றாலும், மறைமுகமாக சில வார்த்தைகளை வெளியில் விட்டு, நாடித்துடிப்புகளை அறிய முற்படுகிறார்கள் என்பது புரியாமல் இல்லை. டில்வின் சில்வாவின் கருத்துக்கள் , நாட்டில் எதிரும் புதிருமான அதிர்வலைகளை ஏற்படுத்துகின்றன. இதே வேலையைத்தான், மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் செய்தார்கள். மக்களின் நாடித்துடிப்பை பார்த்து, அரசியல் செய்ய முற்பட்டால், அமைதியையும் சுமுகநிலையையும் நாம் நிரந்தரமாக்கிக் கொள்வது கடினமாகிவிடும்.

ஆகவே, பிறந்திருக்கின்ற இந்த புத்தாண்டில், மாற்றத்தை செய்ய வேண்டும் என்ற உறுதிப்பாட்டை அரசு சிரம் மேற்கொள்ள வேண்டும். இனப் பிரச்சனைக்கு தீர்வு காண்டம் வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன்தான், தமிழர்களும் முஸ்லிம்களும் இந்த அரசுக்கு வாக்களித்தார்கள். இந்த விடயத்தில் மூவின மக்களின் எதிர்பார்ப்பும் வீண் போய்விடக் கூடாது.




# நிம்மதி மேலோங்க வரம் அருளுமா புத்தாண்டு...?

நிறைவும், நிம்மதியும், சமாதானமும், நம்பிக்கையும் நிறைந்த வாழ்வு என்பது அனைவரும் விரும்பும் ஒரு அலாதிப்பிரியமான வாழ்வியலின் அடிப்படை அம்சம். அத்தோடு அது ஒவ்வொரு மனிதனின் வாழ்வியல் உரிமையாகவும் இருக்கிறது.

இந்த வாழ்வியல் உரிமையும், வசதி வாய்ப்புக்களும் சுதந்திரமும் எல்லோருக்கும் தேவை. அரசனுக்கும் ஆண்டிக்கும் அது தேவை. நீதிபதிக்கும் வழக்கறிஞருக்கும் தேவை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் தேவை. தத்திக்கும் குழந்தைக்கும் தேவை. தள்ளாடும் வயோதிபருக்கும் தேவை. ஒட்டு மொத்தத்தில் இந்த இயற்கைப் பிரபஞ்சத்திற்குமே நிம்மதியும் நிறைவும் தேவை.

அதனை அடைந்து கொள்ளத்தான் அனைவரும் அரக்கப் பரக்கப் பாடுகின்றனர்.

ஆனால், இலங்கையர்களாகிய நமக்கு சுதந்திரத்திற்குப் பின்னர், கடந்து வந்த பாதை கடினமானது.

1948இல் சுதந்திரம், 1956இல் சிங்களம் மட்டும் பிரகடனம், 1970இல் ஜே.வி.பி கிளர்ச்சி, 1983இல் கறுப்பு ஜுலை, 198இல் கிழக்கில் இனக் கலவரம், 1987இல் இந்தியப் படையினரின் நடவடிக்கைகள், 1990இல் வடக்கு கிழக்கில் இனப்படுகொலை, வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிப்பு, 2009இல் இறுதி யுத்தம், 2010-2018 வரை முஸ்லிம் விரோதப் போக்குகள், 2019இல் தேவாலய குண்டுவெடிப்பு, 2022இல் பொருளாதார நெருக்கடி.

இதற்கிடையே அவ்வப்போது நம்மைச் சூழ்ந்து கொள்ளும் இயற்கை இடர்களான 1957ஆம் ஆண்டின் பெருவெள்ளம், 1978இல் சூறாவளி, மண் சரிவுகள், 2004 டிசெம்பரில் சுனாமி, 2020இல் உயிர்க்கொல்லி கொரோனா வைரஸ் தொற்று என தொடராக இடம்பெற்று வந்துள்ள இயற்கை செயற்கை நிகழ்வுகள் இலங்கையரை வெறுப்பும் விரோதமும் விரக்தியும் நிறைந்த சூழ்நிலைக்குள் தள்ளி விட்டுள்ளன.

சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியிலிருந்து இப்பொழுது வரை வன்முறைகளினால் அழிவுகளையும் ஆபத்துக்களையும், அவநம்பிக்கைகளையும் எதிர்கொண்டு இந்த ஒட்டு மொத்த எல்லாப் பாதிப்புக்களையும் சுதாகரித்துக் கொண்டு எழுந்து, இன்னும் வரப்போகின்ற ஆண்டின் சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராய் இருப்பதுதான் இலங்கையரின் சிறப்பு என்றாகிவிட்டது.

**விரக்தி, வெறுப்பு நெருக்கடியினூடே விடைபெற்றது 2024**

இலங்கையர்கள் தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி, அரிசிப் பற்றாக்குறை உட்பட அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு, அதிகரித்த விலை, ஏழைகள் பாதித் தேங்காயை 120 ரூபாய்க்கு வாங்க வேண்டிய பரிதாப நிலை, உணவுப் பஞ்சம், எகிறிச் செல்லும் வாழ்க்கைச் செலவு என்பவை நாட்டு மக்களைக் கதியற்ற நிலைமைக்குக் கொண்டு சென்றிருக்கின்றன.

இதற்கும் மேலதிகமாக எரிபொருள் விலை ஏற்றம் மின்சாரக் கட்டண அதிகரிப்பு என்பவையும் இந்த ஆண்டின் தடம் பதித்துச் செல்லும் விடயங்களாக அமைந்திருந்தது.

இஞ்சி 3000 ரூபாய், பச்சை மிளகாய் 1500 ரூபாய், ஒரு தேசிக்காய் 100 ரூபாய் என்ற நிலைமையும் இந்த ஆண்டில்தான் ஏற்பட்டது. நாட்டில் நாலாபுறங்களிலும் உப்பளங்கள் இருந்தும் வெளிநாட்டிலிருந்து 30 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்யும் நிலைமையும் அரிசியை இறக்குமதி செய்யும் நிலைமையும் இந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்டது.

நாளாந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பொருட்களின் தாங்கவொண்ணா விலையேற்றம், வியாபாரிகளின் கொள்ளை இலாபம் அடிக்கும் நடவடிக்கைகள் என்பனவற்றினால் மக்கள் சொல்லவொண்ணா நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்கள்.

இதனால் மக்கள், தாங்கள் வாழ முடியாது என்ற நிலையில் தடுமாறிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றார்கள். தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

தற்போது வாழ்க்கைச் செலவு எகிறிக் கொண்டு போகின்றது. மக்கள் கதிகலங்கிப்போய் நிற்கின்றார்கள்.

அரிசி விலையேற்றம் அதிர்ச்சியளிக்கிறது. சந்தையில் பச்சை அரிசியைக் கூட வாங்க முடியாத நிலையில் அரிசிக்குத் தட்டுப்பாடு.

நாட்டு மக்கள் பலர் வாழ்வையும் வாழ்வாதாரங்களையும் இழந்த நிலையிலேயே அனைத்து வகையான பொருளாதார வீழ்ச்சிகளையும், உணவு, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கும் சேவைகளுக்கும் கூட அச்சுறுத்தலை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. விவசாயப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

2024இல் நடந்த ஒரு மாற்றமான நடவடிக்கை என்று அரசியல் ஆட்சி மாற்றத்தைக் கூறலாம். ஊழல், மோசடிகள், வன்முறைகளிலிருந்து விடுபட்ட, அனைவரையும் உள்ளடக்கிய, புதியதோர் அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதை நோக்காக வைத்து மக்கள் இந்த மாற்றத்தைக் கொண்டு வந்தார்கள். மற்றப்படி மக்கள் எதிர்பார்க்கும் சாதக பலன்கள் ஏதும் இன்றோடு கடந்து செல்லும் இந்த ஆண்டில் கிட்டவில்லை.

இந்த ஆண்டு மாத்திரமல்ல இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் மலர்ந்த எந்த ஒரு ஆண்டின் வருகையும் ஆக்கபூர்வமானதாக இருக்கவில்லை. அந்த ஆண்டுகளோடு 2024ஆம் ஆண்டும் இணைந்து கொள்கிறது.

நமது வரலாற்றுச் சவால்களிலிருந்து மீண்டெழ வேண்டும் என்பதுதான் இன மத பேதமில்லாது இலங்கையர் அனைவரும் விரும்பும் ஆதங்கமாக உள்ளது.

ஆனால், இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் இடம்பெற்ற இனவாத, மதவாத, மொழிவாதக் கோளாறுகளும், கடந்த 30 வருட காலமாக மூர்க்கத்தனமாக இடம்பெற்ற ஆயுத முரண்பாடுகளும் ஆக்கபூர்வமானதாக இருந்திருக்கவில்லை.

இன மத மொழி வேறுபாடுகளின்றி நாம் அனைவரும் இலங்கையர்தான் என்று கொண்டால் இலங்கை ஒரு சமாதான நாடாகத் தோன்றுகின்றதா?

ஒவ்வொருவரும் தமக்குள்ளே சமாதானமாக இருக்கின்றோமா? அடுத்த சமூகங்கள் அமைதியுடன் வாழ நாம் ஏதாவது செய்திருக்கின்றோமா?

சமாதானமாக இருக்கும் உணர்ச்சியை எவ்வாறு உணர்ந்து கொள்வது?

எந்தத் தருணத்தில் சமாதானமாக இருப்பதாகவும் எந்தத் தருணத்தில் சமாதானமாக இல்லை என்று உணர்கின்றோம்?

எத்தகைய எண்ணங்கள் அல்லது நடவடிக்கைகள் எங்களைச் சமாதானமாக வைத்திருப்பதற்கு உதவி புரிகின்றன? என்ற கேள்விகளை எழுப்பி குறைந்தபட்ச சமாதானத்தையாவது நிலைநாட்டுவதற்கு நாம் முயற்சித்திருக்க வேண்டும்.

வேறுபாடுகள், பிரிவுகள் என்பது இயற்கையானது எமக்கிடையேயான வேறுபாடுகள் யாவை? பால் நிலை, நிறம், வயது, ரசனை, மொழி, பிரிவுகள் என்பவை அவற்றிலடங்கும்.

தமிழர்களாயினும் முஸ்லிம்களாயினும் சிங்களவர்களாயினும் எல்லாச் சமூகங்களும் தமது எண்ணப் போக்குகளால் இழந்தவை ஏராளம்.

சமாதானத்தை குறைந்தபட்சம் செலவில்லாமல் ஒரு புன் சிரிப்புடன் ஆரம்பிக்கலாம். இந்த உள்ளார்ந்த புன் சிரிப்புக்கு மொழி, மதம், பிரதேசம், இனம், பால் வேறுபாடு, அதிகார அந்தஸ்து அல்லது தொழில் நிபுணத்துவம் என்பவை ஒருபோதும் ஒரு தடையாக இருக்கப் போவதில்லை.


சமாதானத்தை வன்முறை மூலம் ஒருபோதும் அடைய முடியாது. வன்முறையைப் பாவிப்பதற்குப் பதிலாக மென்முறையை அல்லது நன்முறையைப் பாவித்தே சமாதானத்தை அடைந்து கொள்ள முடியும் எனக் கூறிய சான்றோர்கள் அதனைச் செயற்படுத்திக் காட்டி விட்டும் சென்றிருக்கின்றார்கள். சமாதானம் புரிந்துணர்வு எனும் விதையிலிருந்து விருட்சமாக வளரலாம்.

“கண்ணுக்குக் கண்” எனும் பழிவாங்கல் முறை இந்த உலகை குருடாக்கவே உதவும் என்கிறார்கள் சமாதான செயற்பாட்டாளர்கள், மேலும், மற்றவர்களுடன் போர் புரிபவர்கள் தங்களுக்குள்ளும் போர் புரிந்து

தொடர்ச்சி.. 10ம் பக்கம்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்



# 21ஆம் நூற்றாண்டில் 25 ஆண்டுகள் கடந்ததை அறிவிக்கும் புத்தாண்டு!




# காரிருளிலிருந்து ஒளிக்கீற்றை நோக்கும் புத்தாண்டு பிறப்பு



அருள் சத்தியநாதன்

உலக மக்கள் அனைவருமே தமது சமூக மற்றும் வர்த்தக தேவைகளுக்காகப் பயன்படுத்தும் கிரிகோரியன் கலண்டரின்படி ஜனவரி முதலாம் திகதியோடு 2025ஆம் ஆண்டு பிறக்கிறது. உலகெங்குமுள்ள புத்தாண்டு கொண்டாட்டக்காரர்களை எடுத்துக் கொண்டால் நிறைய போதை, சுவையான உணவுகள், பொங்கி வழியும் ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி பூரிப்புடன் புத்தாண்டை எதிர்கொள்வதே வழமை. தாம் கொண்டாடி மகிழும் புத்தாண்டு தமக்காக எவற்றை எல்லாம் தன்னிடம் வைத்திருக்கிறது என்பதை அறியாத நிலையிலேயே அனைவரும் புதிய ஆண்டை வரவேற்கிறார்கள். அவர்களில் சிலர் புதிய ஆண்டின் நிறைவைப் பார்க்காமலேயே போய் விடலாம். மேலும் பலர் குடும்ப மற்றும் பொருளாதார ரீதியாக வளர்ச்சிபெற வேறு பலர் வாழ்க்கையில் நொடித்துப் போய் விடலாம். பதவி உணர்வுகள், குடும்ப உறுப்பினர்களின் இழப்புகள், புத்திரர்களின் செழிப்பு, நாடளாவிய ரீதியான பெரும் பின்னடைவுகள் – சந்தோஷம் துக்கம், வேதனை என பலதரப்பட்ட உணர்வுகளை ஒரு 365 நாட்களின் தொகுதி ஒவ்வொரு மனிதனுக்கும் அளிக்கிறது.

வாழ்க்கையின் சுவையான விஷயமே நாம் தனியாகவும் கூட்டாகவும் பெறும் அனுபவங்கள் தான். வருடத்தின் ஆரம்பத்தில் நாம் சோதிடர்களின் எதிர்வு கூறல்களை செவிமடுக்கிறோம், வாசிக்கிறோம். பின்னர் அவை மறந்துபோய் விடுவதால் வருடத்தின் முடிவில் அவற்றில் எத்தனை பொய்யானவை, எத்தனை நிகழ்வுகள் சொல்லப்படாதவை என்பதை நாம் கவனிக்கத் தவறி விடுகிறோம். 2004ஆம் ஆண்டு பிறந்தபோது எந்தவொரு சோதிடமுமே சுனாமி என்ற பேரலை எழுந்து ஆயிரக்கணக்கானோரைக் காவு கொள்ளும் என்ற முக்கியத் தகவலைத் தெரிவிக்கவில்லை என்பதை ஒரு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

புத்தாண்டு பிறப்பு என்பது காரிருளில் நின்றபடி ஒளிக்கீற்றை எதிர்பார்த்தபடி இருப்பது போலத்தான். பனிப்பொழிவு மிக்க ஓரிடத்தில் நின்றபடி எதிரே ஏதாவது தெரிகிறதா என்பதை உற்றுப் பார்ப்பது போலத்தான். ஒவ்வொரு புத்தாண்டு பிறப்பின்போதும் நாம் உண்மையில் எதிரில் தெரிவது என்ன என்பதைத் தெரியாத இருட்டில் தான் இருக்கிறோம். அதனால்தான் அத்தனை விளக்குகளையும் எரியவிட்டு வான வேடிக்கைகளால் வானத்தையும் வெளிச்சமாக்குகிறோம்!

2020 பிறந்தபோது கோவிட் தொற்று நம்மை சீரழிக்கும் என்பதை நாம் அறிந்திருக்கவில்லை. 2021 பிறந்தபோது பொருளாதார அதளபாதாளத்தில் நாடு விழும் என்பதை எந்தக் கொம்பனும் எமக்குச் சொல்லவில்லை. கமல்ஹாசன் சொல்வதைப் போல எதிர்பாராததை எதிர்பாருங்கள் என்பது தான் ஒவ்வொரு புத்தாண்டும் சொல்லும் உண்மையான செய்தி. இதை ஆங்கிலத்தில் Expect the Unexpected என்பார்கள். இப்புத்தாண்டில் குறிப்பிடத்தக்க அளவில் பொருளாதாரம் வளர்ச்சி பெற்று வாழ்க்கை செலவு குறையும், தொழில் வாய்ப்புகள் பெருகும், நிம்மதி பெருமூச்சு விடலாம் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. வாழ்க்கைச் சுமை அதிகரிக்கும் என்றுதான் தோன்றுகிறது. அதே சமயம் ஊழல் மோசடி குறைவதற்கும், அரசு தரப்பு சேவைகள் மேம்படுவதற்கும் வாய்ப்புகள் காணப்படுகிறது. ஊழல் மோசடி குறைவடைந்தால் குற்றச் செயல்களும் குறைவடையலாம். எனினும் வறுமை நிலை குறைவடையுமா? மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்குமா என்று தெரியவில்லை. 24ஆம் ஆண்டைப் போலவே 25ஆம் ஆண்டிலும் இயற்கை சீற்றம் தொடர்வதற்கான வாய்ப்பும் உண்டு. தமிழர் பிரச்சினை? ஒற்றுமையும் ஒருமித்த பார்வையும் இல்லாததால் அப்படியே தொடரத்தான் செய்யும் என்கிறது எதிர்வுகூறும் புத்தாண்டு கழுகு. இப் புத்தாண்டு பிறப்பு, புத்தாயிரமாண்டின் முதல் நூற்றாண்டின் கால்வாசி பகுதியின் முடிவைக் குறிப்பதாக உள்ளது. கடந்த கால் நூற்றாண்டை எடுத்துக் கொள்வோமானால் மிக முக்கியமான நிகழ்வுகள்




நடைபெற்றதை அறிய முடிகிறது. 2001 இல் அமெரிக்க இரட்டைக் கோபுரத்தின் மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதல், 2005 இல் பராக் ஒபாமாவின் அமெரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதியாக பதவியேற்பு, உலகம் முழுவதும் எதிரொலித்த அமெரிக்காவின் பொருளாதார சரிவு, 2010 இல் மெக்சிகோவில் நிகழ்ந்த எண்ணெய்க் குழாய் வெடிப்பு, உக்ரைன் போர், கோவிட் 99 உலகெங்கும் பரவியதால் உலகமே முடங்கிப் போனமை, அரபு வசந்தம், அதன் எதிரொலியாக சிரிய சிவில் யுத்தம், கடாபி கொல்லப்பட்டமை, எகிப்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம், பிரபஞ்ச தோற்றத்துக்கு முன்னர் நிகழ்ந்திருக்கக் கூடிய பெரு வெடிப்பின் போது வெளிப்பட்டிருக்க வேண்டும் என நம்பப்படும் ஹிக் பொஸான் என்ற "கடவுளின் துகள்"கள் பரிசோதனை கூட ஆய்வில் வெளிப்பட்டமை, இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலும், சிரிய அதிபர் தப்பியோட அந்நாட்டை ஆயுத குழுக்கள் கைப்பற்றியிருப்பது என பல முக்கிய நிகழ்வுகள் கடந்த 25 ஆண்டு காலத்தில் நடைபெற்றிருக்கின்றன.

நரேந்திர மோடி மூன்று தடவைகள் இந்தியாவில் பிரதமராகப் பதவியேற்றிருப்பது, பௌத்த சிங்கள ஜனாதிபதியாக மார்தட்டி பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷ, இரண்டரை வருடங்களில் அதே சிங்கள பௌத்தர்களினால் விரட்டியடிக்கப்பட்டமை, வங்கப் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவுக்கு தப்பியோடியமை, தெற்காசிய பிராந்தியத்தில் கம்யூனிசம் சார்ந்த ஒரு இடதுசாரி கட்சியான ஜே.வி.பி. ஜனநாயக தேர்தலின் ஊடாக ஜனாதிபதி பதவியையும், நாடாளுமன்றத்தையும் இலங்கையில் கைப்பற்றியிருப்பது என்பன பிராந்திய முக்கிய நிகழ்வாகக் கொள்ள முடியும்.

ஜெயலலிதா ஊழல் மோசடி வழக்கில் சிறை சென்றது மற்றும் அவரது மரணம், கலைஞர் கருணாநிதியின் மரணம், பல்துறை ஆற்றல் கொண்ட துக்ளக் சோவின் மரணம், இசையமைப்பாளர் விஸ்வநாதன், நகைச்சுவை நடிகர் விவேக், பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் மறைந்ததும் இந்த முதல் 25 வருடங்களுக்குள் தான். இவ்வளவு காலமாக நாம் ஜனநாயக, கம்யூனிச மற்றும் சர்வாதிகார நாடுகளை அல்லது ஆட்சி முறைகளைத்தான் கண்டிருக்கிறோம். முன்னர் இன்னொரு பிரிவினர், கடற்கொள்ளையர்கள், கடலில் ஒரு பயங்கர ஆட்சியை நடத்தி வந்திருக்கிறார்கள். பெருங்கடல்களில் பயணிக்கும் வணிக மற்றும் பயணிகள் கப்பல்களை மறித்து கொள்ளையிட்டு வந்தார்கள். ஜூலியஸ் சீசர் காலம் முதல் இரண்டாம் உலகப் போல் காலம்வரை உலகளாவிய ரீதியாக கடற்கொள்ளையர் பிரச்சினையால் நாடுகள் பாதிப்பு அடைந்திருந்தன. அதேபோல தற்போது பயங்கரவாத அமைப்புகளும் நாடுகளை ஆளத் தொடங்கியிருப்பதை இக் கால் நூற்றாண்டில் அவதானிக்க முடிந்திருக்கிறது. ஆப்கானிஸ்தானை ஆள்வது பயங்கரவாத அமைப்பான தலிபான். அதன் பொருளாதாரக் கொள்கைகள், செல்வந்த நாடுகளின் ஆதரவின்மை, பெண்களை இழிவாக நடத்தும் அதன் போக்கு என்பனவற்றில் அந்நாட்டு மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். பிரெஞ்சு ஆளுகையின் கீழ் இருந்த லெபனான் ஒரு அழகிய அமைதியான நாடு. அரபு தீவிரவாதத்தால் வெகுவாக பாதிக்கப்பட்ட நாடு அது. இஸ்ரேலுடன் நல்லுறவு பேணும் வாய்ப்பு அதற்குக் கிடைக்கவே இல்லை. முன்னர் பி.எல்.ஓ. அங்கு நிலை கொண்டிருந்ததால் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு அடிக்கடி உள்ளானது. தற்போது இஸ்புல்லா ஒரு பயங்கரவாத அமைப்பு. ஈரானின் பக்க பலத்துடன் அங்கே செயற்பட்டு வருகிறது. அந்த அமைப்பு லெபனானை தன்னுடைய முகாமாகவே மாற்றி வைத்திருக்கிறது.

இதனால் இஸ்ரேலின் கடுமையான தாக்குதல்களுக்கு அந்நாடு இலக்காகி வருகிறது. இருதலைக் கொல்லி எறும்பாக அந்நாட்டின் அப்பாவி மக்கள், காஸாவைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் கடந்த வருடம் எடுத்த மிக மோசமான முடிவால் காஸா ஏறக்குறைய அழிந்தே விட்டது. எந்த பலஸ்தீனியர்களைக் காப்பாற்ற வந்தேன் என மார்தட்டி காஸாவை ஆளவந்த ஹமாஸ், தற்போது அப் பலஸ்தீனியர்களின் இருப்புக்கே உலை வைத்திருக்கிறது என்ற உண்மை அனைத்து நாடுகளும் உணர்ந்த உண்மையாக இருக்கின்ற பொழுதிலும், பல நாடுகள் வெளிப்படையாக அதைச் சொல்லத் தயங்குகின்றன. அவற்றின் கவலை, அது இஸ்ரேலுக்கு சாதகமான கூற்றாகிவிடுமோ என்ற அச்சம்தான். இவ்வாறு மூன்று பயங்கரவாத அமைப்புகள் நாடுகளைத் தன் கைகளில் வைத்திருப்பது இதுவே முதல் தடவை. பயங்கரவாத அமைப்புகளும் நாடுகளை ஆள முடியும் என்பது தற்போது புதிய ஒரு அரசியல் முறையாக மாறியிருப்பது கவலையுடன் கவனிக்கத்தக்க ஒரு விஷயம். தற்போது சிரியாவும் ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கிறது. ஆயுத குழுக்களுக்கு ஈரான் போசகராக விளங்குவது ஒரு தொடர் அச்சுறுத்தல். முன்னர் கடற் கொள்ளையர்கள் தீவுகளை கைப்பற்றி வைத்துக் கொண்டு நாடுகளை திடீர்த் தாக்குதல்களால் அலைக்கழித்தார்கள். தற்போது பயங்கரவாத அமைப்புகள் நாடுகளை ஆள முற்பட்டுள்ளன. இந்த வகையில் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பில் வீற்றிருக்கும் ஜே.வி.பி. ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளப்பட வேண்டியது அவசியம். 1971 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவை சிறை பிடித்து நாட்டின் ஆட்சி அதிகாரத்தை பலாத்காரமாக கைப்பற்றும் நோக்கில் அது ஆயுத கிளர்ச்சியை நடத்தியது. 1987-89 காலப் பகுதியில் இரண்டாவது தடவையாகவும் ஆயுத கிளர்ச்சியை நடத்தியதில், தீவிரவாதத்தில் நம்பிக்கை கொண்டிருந்த அதன் அனைத்து முக்கியத் தலைவர்களும் மடிந்து போனார்கள். சந்திரிகா பண்டாரநாயக்க காலத்தில் ஜே.வி.பி மீளுருவாக்கம் செய்யப்பட்டு ஜனநாயப் பாதைக்குத் திரும்பி, அதன் விடாப்பிடியான நேர்மை அரசியல், வளைந்து கொடுக்காத தனி வழிப்பயணம், ஊழல் மோசடிகளுக்கு எதிரான அதன் உறுதிப்பாடு என்பவற்றால் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று இன்று, ஆயுத பலத்தால் சாதிக்க முடியாததை வாக்கு பலத்தால் சாதித்திருக்கிறது. நாடுகளை ஆளும் ஆயுத குழுக்கள் இதைப் பாடமாகக் கொண்டால் அது உலக அரசியல் அரங்கில் பெரிய மாற்று சிந்தனையாக விளங்கும்.

புதிய ஆண்டு, உலக யுத்தமாகவும் விரிவடையக் கூடிய இரண்டு போர்கள் தொடரும் சூழலில் பிறந்திருக்கிறது. மத்திய கிழக்கு புவியியல் அரசியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஹமாசும், ஹிஸ்புல்லாவும் பலவீனமடைந்த நிலையில் சிரியா சின்னாபின்னப்பட்டுள்ள நிலையில், இஸ்ரேல் அங்கே பலம் வாய்ந்த சண்டியனாகத் திகழ்கிறது. புத்தாண்டில் சர்ச்சைக்குரிய டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கவுள்ளார். இந்த இரண்டு போர்களைத் தவிர உலகம் அமைதியாகவே புத்தாண்டை எதிர்கொள்கிறது. கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பனிப்போர் இப்புத்தாண்டில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரும் என எதிர்பார்ப்போம். மனிதன் மிருக நிலையில் இருந்து பரிணாமம் பெற்றவன் என்பதால் அவனுடைய குரூரத்தின் மீதான பசி என்றைக்குமே தீர்ந்து போகாது. எனவே, பிணக்குகளும் மோதல்களும் உலகில் தொடரத்தான் செய்யும். ஆனால் உலகளவிலான யுத்தம் மாத்திரம் நிகழாமல் இருந்தால் சரி. வாசகர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துகள்!

# 2024

# தடம் பதித்த நினைவுகள்


## ஜனவரி



**17** பரதலக்ஷ்மன் பிரேமச்சந்திரவை கொலை செய்த குற்றத்திற்காக குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பதவி விலகிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பை உச்ச நீதிமன்றம் இரத்து செய்து தீர்ப்பளித்தது.



**21** யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இலங்கை தமிழ் அரசுக்கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.



**24** நிகழ்நிலை உள்ளடக்கத்தினை ஒழுங்குபடுத்தும் நிகழ்நிலை காப்புச் சட்டம் எனும் புதிய சட்ட மசோதா எதிர்க் கட்சியினர் மற்றும் ஆர்வலர்களின் ஆட்சேபனைகளுக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## பெப்ரவரி



**2** முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தரமற்ற தடுப்பூசி கொள்வனவிற்கு அனுமதி வழங்கிய குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.



**26** இலங்கையின் 36வது பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (டிஐஜி) மற்றும் பதில் பொலிஸ்மா அதிபரான தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டார்.




**27** 1977 மற்றும் 1988க்கு இடையில் தொடர்ச்சியாக 11 வரவு செலவுத் திட்டங்களை சமர்ப்பித்த முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல், தனது 98 ஆவது வயதில் காலமானார்.

## மார்ச்



**27** ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) புதிய தேசிய அமைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.




**28** பொதுபல சேனா பொதுச் செயலாளர் வண. கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 2016 ஆம் ஆண்டு பிற்பகுதியில் இஸ்லாம் மதத்திற்கு எதிராக அவதூறான கருத்துக்களை வெளியிட்டமைக்காக நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

**30** துமிந்த திசாநாயக்க, லசந்த அழகியவன்ன மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கட்சியில் இருந்து நீக்கியது.


## ஏப்ரல்



**8** ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டார்.




**16** சர்வோதய சிரமதான இயக்கத்தின் இலங்கை நிறுவுநர் கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன தனது 93வது வயதில் காலமானார்.



**21** 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு அன்று கொடிய பயங்கரவாத தாக்குதல்களின் ஐந்தாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இலங்கை முழுவதும் உள்ள தேவாலயங்கள் இரண்டு நிமிட மௌன அஞ்சலியை அனுசரித்தன.

## மே



**2** மன்னார் மற்றும் பூநகரியில் காற்றாலை மின் நிலையங்களை மேம்படுத்த இந்திய கோடீஸ்வரர் கௌதம் அதானியுடன் மேற்கொண்ட திட்டத்தினை அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.



**26** டயானா கமகே பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க சட்டரீதியாக தகுதியற்றவர் என உயர்நீதிமன்றம் அறிவித்தது.




**27** ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவியை இராஜினாமா செய்தார்.

**27** பல அரசியல் கட்சிகள் மற்றும் புத்திஜீவி குழுக்களுக்கு இடையில் கொழும்பில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை தொடர்ந்து சர்வஜன பலய ஆரம்பிக்கப்பட்டது.

සර්වජන බලය
சர்வஜன அதிகாரம் • SARVAJANA BALAYA

## ஜூன்



**20** இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார்.



**20** பெண்களுக்கான அதிகாரமளித்தல் சட்டமூலம் அதன் மூன்றாவது வாசிப்பைத் தொடர்ந்து திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.



**26** இருதரப்பு கடனாளிகளுக்கு செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடனுக்கான இறுதி மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை இலங்கை எட்டியுள்ளதாக நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை வழங்கினார்.

## ஜூலை



**1** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் தனது 91 ஆவது வயதில் காலமானார்.



**7** இலங்கைப் பொலிஸாரால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.கொழும்பைச் சுற்றியுள்ள பல பகுதிகளில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், முழுவதுமாக விரிவுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.



**12** இலங்கையின் புதிய சட்டமா அதிபராக கே.ஏ. பரிந்த ரணசிங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டார்.

## ஓகஸ்ட்



**2** கொழும்பு புதிய கோரளை பிரதம சங்க நாயக்கரும் கொழும்பு ஹுனுப்பிட்டிய கங்காராம விகாராதிபதி வண. கலபொட ஞானிஸ்ஸர தேரர் தனது 81 ஆவது வயதில் காலமானார்.



**22** இலங்கை மத்திய வங்கியின் (CBSL) ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிற்கு 2024 ஆம் ஆண்டுக்கான 'A' தர மத்திய வங்கி ஆளுநர் விருது வழங்கப்பட்டது.

## செப்டெம்பர்




**23** இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அனுரகுமார திஸாநாயக்க, கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.




**24** NPP பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இலங்கையின் பிரதமராக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் பதவிப் பிரமாணம் செய்து, நாட்டின் வரலாற்றில் அந்தப் பதவியை வகிக்கும் மூன்றாவது பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார். திஸாநாயக்க, கலாநிதி அமரசூரிய மற்றும் NPP பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் இடைக்கால அமைச்சரவையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

**27** ஜனாதிபதி திஸாநாயக்கவினால் பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்டார்.



## ஒக்டோபர்

**4** இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் கொழும்பில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவை சந்தித்தார்.



**9** நாட்டில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான 51/1 தீர்மானத்தின் ஆணையை நீடிக்கக் கோரி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் (UNHRC) முன்வைக்கப்பட்ட வரைவுத் தீர்மானத்தை இலங்கை நிராகரித்தது.

UNHRC

ஜாதிக ஜன பலவேகய
தேசிய மக்கள் சக்தி
NATIONAL PEOPLE'S POWER

## நவம்பர்

**15** தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அகில இலங்கை இறுதி முடிவுகளின்படி ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் NPP பாராளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றியைப் பெற்றது. எண்ணப்பட்ட மொத்த வாக்குகளில் 61.56% பதிவாகி 18 தேசியப்பட்டியல் ஆசனங்கள் உட்பட 159 ஆசனங்களை NPP கைப்பற்றியது, விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து முதல் முறையாக அதிக பெரும்பான்மையைப் பெற்றுள்ள கம்பஹா மாவட்ட NPP தலைவர் விஜித ஹேரத் 716,715 வாக்குகளைப் பெற்றார்.



**18** 21 பேர் கொண்ட அமைச்சரவை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டது.



**26** சீரற்ற காலநிலைக்கு மத்தியில், அம்பாறை மாவட்டம் காரைதீவில் பாடசாலை மாணவர்கள் உட்பட 13 பேரை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது: ஆறு மாணவர்கள் உட்பட 8 பேரின் சடலங்கள் இறுதியாக மீட்கப்பட்டன.

## டிசம்பர்



**2** இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிற்கு முன்பாக உச்ச நீதிமன்ற நீதியரசர் முர்து பெர்னாண்டோ பதவியேற்று, நாட்டின் வரலாற்றில் அந்த பதவியை வகிக்கும் இரண்டாவது பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார்.

**17** பாராளுமன்ற சபாநாயகராக கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.






**13** சபாநாயகர் அசோகா ரான்வாலா தனது கல்வித் தகுதி தொடர்பான சர்ச்சையை அடுத்து தனது பதவியை இராஜினாமா செய்தார்.



**20** ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க இந்தியாவிற்கு தனது முதலாவது அரச விஜயத்தின் போது, புதுடில்லியில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

தொகுப்பு : கிருஷிகா பாலரூபன்



# ஜூபிலி ஆண்டில் உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதம் நிரம்ப கிடைக்க வேண்டும்

## மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை

(எஸ்.ஆர்.லெம்பேட்)

புதிய ஆண்டு பிறக்கும் போதும்,நாங்கள் வாழும் சூழலில் எத்தனையோ போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன.இதனால் மக்கள் கொல்லப்படுவதோடு,அனாதைகளாக இடம் பெயர்கின்றனர்.

எனவே ஜூபிலி ஆண்டில் உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதங்கள் நிரம்பக் கிடைக்க வேண்டும் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கையில்

2025 ஆம் ஆண்டு எங்களுக்குப் புத்தாண்டாகப் பிறக்கிறது.இயேசுநாதர் பிறந்து 2025 ஆண்டு நிறைவேறுகின்றது என்பதை உணர்ந்து இந்த புத்தாண்டை அன்புடன் வரவேற்போம்.

நாங்கள் வாழும் சூழலில் எத்தனையோ போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. உக்கிரைன் நாட்டிற்கு எதிராக ரஷ்யா போராடிக்கொண்டு இருக்கிறது.

இஸ்ரேல்- பாலஸ்தீனத்திற்கு எதிராக காஸாவில் போர் இடம்பெறுகின்றது. இந்த போரின் போது அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர். தமது உடைமைகளை இழக்கின்றார்கள். பாரிய துக்கத்துடன் அவர்கள் வேறு இடங்களுக்குப் பாதுகாப்பு தேடிச் செல்கின்றனர்.அவர்கள் எல்லாம் அனாதைகள் போல் பல இடங்களில் கூடி இருக்கிறார்கள்.

எனவே பிறந்துள்ள புத்தாண்டு 2025 ஆம் ஆண்டு திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களினால் யூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த யூபிலி ஆண்டின் ஆசீர்வாதங்கள் உங்கள் அனைவருக்கும் நிரம்பக் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

பிறந்துள்ள 2025 ஆம் ஆண்டு உங்கள் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான எதிர்பார்ப்பு தரக்கூடிய ஒரு ஆண்டாக அமைய வாழ்த்துகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.



# சங்குப்பிட்டி பாலத்தின் வேலைகளை பார்வையிட்ட இளங்குமரன் எம்.பி

(பு.கஜிந்தன்)

சங்குப்பிட்டி பாலத்தின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை அங்கு தரமற்ற வேலைகள் நடைபெறுவதாக சிலர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

இந்நிலையில் நேற்று குறித்த பகுதிக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், வேலைகளின் தரம் குறித்தும், மூலப்பொருட்களின் தரம் குறித்தும் பார்வையிட்டதுடன் வேலையில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

### அதிபரின் ஊழல் தொடர்பில் அறிவித்து 2 வருடம்

# நடவடிக்கை எடுக்காததால் ஜனாதிபதிக்குக் கடிதம்

(பு.கஜிந்தன்)

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் அதிபராக இருந்து ஊழல் செயற்பாடுகளில் ஈடுபட்டமை தொடர்பில் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு தெரியபடுத்தி 2 வருடங்களாகியும் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் மீள நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி, கல்வி அமைச்சு மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் உட்பட பல்வேறு தரப்பினருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அமைந்துள்ள கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் கடந்த ஏழு வருடங்களுக்கும் மேலாக வினாசித்தம்பி சிவனேசன் பாடசாலை அதிபராக இருந்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் தவறாக வழி நடத்தி கொட்டடி சமூகத்தை ஏமாற்றி மிக மோசமான ஊழல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளமை சமூகத்தில் ஆழ்ந்த அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருந்தது. பாடசாலை சமூகத்தை ஏமாற்றி ஊழல் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்த அதிபர் தொடர்பான குற்றச்சாட்டுக்களைப் பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகளாகிய நாம் ஆளுநருக்கு 27-12-2022இல் எழுத்து மூலம் அறிக்கையிட்டிருந்தோம். அதன் பிரதிகள் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்தன.

எனினும் இரண்டு வருடங்கள் கழிந்த நிலையிலும் எமது கோரிக்கை முறையான விதத்தில் விசாரிக்கப்பட்டு நியாயமான தீர்வு இன்று வரை வழங்கப்படவில்லை.

2015இல் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்ற இவர் 2019 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றிற்குப் பதவி உயர்வு அடைந்துள்ளார். அதன் பின்னரும் இவரை இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டதன் பின்னணி என்ன?

ஊழலற்ற நாட்டை கட்டியெழுப்பும் இலக்குடன் செயற்பாடுகளை முன்னெடுக்கும் தற்போதைய அரசிடம் சிறார்களின் எதிர்காலம் பாதிக்கப்படாமல் இருக்கப் பொருத்தமான தீர்வை நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

எனவே மீண்டும் விசாரணைக் குழுவை நியமித்து எமக்கு நியாயமான தீர்வினை பெற்றுத் தரும்படி தங்களைவேண்டி நிற்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சந்நிதியான் ஆச்சிரமம் பதுளை ஆலயத்துக்கு 200,000 ரூபா உதவி





(கரவெட்டி நிருபர்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் மலையகத்தில் மேற்கொணைடுவரும் ஆன்மீக, கல்வி சமூக நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பதுளை – வேவெஸ்ஸ, 3ஆவது மைல் ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலய புனருத்தானம் மேற்கொள்வதற்கு முதலாம் கட்ட நிதியாக 200,000 ரூபா ஆலய நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை (30) மாலை 5.00 மணியளவில் இந்த உதவித் திட்டத்தினை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

# வடக்கு மக்கள் ஒவ்வொருவருக்கும் முன்னேற்றத்தைக் கொண்டுவரட்டும்

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் புத்தாண்டு வாழ்த்து



புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த வேளையில், அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு வடக்கு மக்கள் ஒவ்வொருவருக்கும் முன்னேற்றத்தைக் கொண்டுவரட்டும்.

புத்தாண்டு என்பது தனியே கொண்டாட்டத்துக்கான நேரம் மட்டுமல்ல எங்கள் சிந்தனைகளைப் புதுப்பித்தலுக்கான தருணமும் கூட.

மகிழ்வுடன் வரவேற்கும் புதிய ஆண்டில் "முறைமை மாற்றத்தை" நாம், எம்மில் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆரம்பிக்கவேண்டும் என்று விரும்புகின்றேன். எங்கள் நிர்வாகத்தின் முதுகெலும்பாக, மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதிலும் – அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் சேவைகளை வழங்குவதிலும் அரச பணியாளர்கள் ஒவ்வொருவரினதும் அர்ப்பணிப்பும் தொழில்முறையும் மிக முக்கியமானவை. நேர்மை, செயல்திறன் மற்றும் பொறுப்புணர்வோடு உங்கள் விலைமதிப்பற்ற சேவைப் பங்களிப்புகளைத் தொடர வேண்டும் என அன்புரிமையுடன் கோருகின்றேன்.

பொதுச் சேவையில் மிக உயர்ந்த தரங்களை நிலைநிறுத்த நாங்கள் ஒன்றாகப்பாடுபடுவோம். எங்கள் மக்கள் அனைவருக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்க அயராது உழைப்போம். புதிய ஆண்டிலிருந்து எங்கள் பொதுச் சேவையை அன்பானதும், விரைவானதும், தரமானதுமாக மாற்றுவதற்கு நாம் ஒவ்வொருவரும் உறுதி பூண்டு "முறைமை மாற்றத்தை" ஆரம்பிப்போம். இந்த ஆண்டை எமது மாகாணத்துக்கு, ஒரு குறிப்பிடத்தக்க இலக்கை அடைவதற்கான ஆண்டாக மாற்ற, அரசியல் தலைமைத்துவத்தில் உள்ளவர்கள் – அரச பணியாளர்கள் – மக்கள் என நாம் அனைவரும் ஒற்றுமையுடன் பயணிப்போம்.

# யாழ்ப்பாணத்தில் விசம் அருந்தி ஒருவர் உயிரிழப்பு

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணத்தில் சயனைட் அருந்தி நகை உற்பத்தியாளர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். இதன்போது யாழ்ப்பாணத்தை சேர்ந்த தேவதாஸ் திலீப்குமார் (வயது 50) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த குடும்பஸ்தரும் அவரது மகனும் கன்னாதிட்டி பகுதியில் உள்ள நகை உற்பத்தி செய்யும் இடத்தில் வேலை செய்து வந்தனர். இந்நிலையில் குறித்த நபர் நேற்று வேலைக்காகச் சென்றிருந்தார். பின்னர் மகன் வேலைக்குச் சென்றபோது அங்குத் தந்தை மயக்கமடைந்து இருந்ததை அவதானித்தார்.

விடயத்தைத் தாய்க்குத் தெரியப்படுத்திய மகன், தாயை அழைத்து, மயக்கமடைந்த தந்தையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தார். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சயனைட் அருந்தியதால் அவரது மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# கரைதுறைபற்று பொது விளையாட்டு மைதானம் திறப்பு







(பு.கஜிந்தன்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் மேம்படுத்தப்பட்ட முல்லைத்தீவு கரைதுறை பற்று பொது விளையாட்டு மைதானம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் நேற்று செவ்வாய்க்கிழமை (31) திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கரைதுறைபற்று பிரதேச செயலர், கரைதுறைபற்று பிரதேச சபைச் செயலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விளையாட்டு மைதானத்தின் பெயர் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு, நாடாவெட்டி திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து, கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சங்கானை வைத்தியசாலையில் நாய்களின் தொல்லை அதிகரிப்பு





(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் – சங்கானை வைத்தியசாலையிலும் அதன் சுற்றாடலிலும், வைத்தியசாலையின் அருகிலுள்ள சங்கானை பிராந்திய வைத்திய அதிகாரி அலுவலகத்தினை அண்மித்த சுற்றாடலிலும் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகச் செல்லும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் வளாகம், பிரதான நுழைவாயில், அருகிலுள்ள வீதிகள் மற்றும் சந்திகளில் அதிகளவிலான நாய்கள் உலாவித்திரிகின்றன. இதனால் நோயாளர்கள் மட்டுமின்றி வீதியால் செல்வோரும் அச்சத்துடன் பயணிக்கின்றனர். நோய்களால் பாதிக்கப்பட்ட மக்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் செல்லும்போது நாய்களைக் கண்டு அச்சம் கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி வைத்தியசாலைச் சுற்றாடலில் அவை மலம் மற்றும் சிறுநீர் கழிப்பதால் பெரும் சுகாதாரப் பிரச்சினையும் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# இந்த ஆண்டுக்குள் மட்டக்களப்பில் அரச ஒசுசல கிளை

▪ எம்.பஹத் ஜுனைட்

தேர்தல் காலத்தில் நாம் அறிவித்திருந்தமைக்கு அமைவாக, அரச ஒசுசல கிளையானது மட்டக்களப்பில் 2025ம் ஆண்டுக்குள் நிறுவுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

இந்தக் கிளையானது தகுதி வாய்ந்த, நன்கு பயிற்சி பெற்ற மருந்தாளர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த விற்பனை ஊழியர்களை கொண்டதாக அமையும். இதனூடாக பொது மக்கள் மலிவு விலையில் தரம் உறுதி செய்யப்பட்ட மருந்துகளினை பெற்றுக்கொள்வதுடன் சிறந்த சேவையினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலை மற்றும் மாவட்டத்தின் அனைத்து பிரதேச பிரிவுகளிற்கும் உட்பட்ட பிரதேச வைத்தியசாலைகளின் குறைபாடுகளும்,விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விரைவில் குறைபாடுகள் நிவர்த்தியாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

# கட்சிக்கு சதி செய்தோருக்கு எதிராக நடவடிக்கை



▪ கே.எ.ஹமீட்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீமையும் கிழக்கு மாகாணத்தில் கட்சியையும் தோற்கடிப்பதற்கு கட்சிக்குள் ளிருந்தும், வெளியிலிருந்தும் சதிகள் இடம்பெற்றனவெனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை, கட்சிக்குள்ளிருந்து கொண்டு கட்சித் தலைமையையும், கட்சியையும் தோற்கடிப்பதற்கு சதி செய்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கட்சி மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவான 5 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கௌரவிப்பு விழா நடத்துவது தொடர்பான விசேட கூட்டம் அட்டாளைச்சேனை மத்திய குழுத் தலைவர் எஸ்.எல். ஹலீம் தலைமையில் BEACH HOUSE மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் உதுமாலெப்பை தொடர்ந்து உரையாற்றுகையில்,

அட்டாளைச்சேனை பிரதேசத்திலிருந்து நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் நமது கட்சிக்கு கிடைத்துள்ளது என்பதுதான் யதார்த்தம். நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள 16 பிரதேசங்களிலிருந்து நமது கட்சியின் சின்னமான மரச்சின்னத்திற்கு அளிக்கப்பட்ட வாக்குகளினால்தான் நமது கட்சிக்கு ஒரு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது என்பதே மற்றுமொரு யதார்த் தமாகும்.விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜனவரி மாதத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான திருத்தச்சட்ட மூலம் அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலை விரைவாக நடாத்துமாறு உயர் நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நமது அம்பாறை மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மை உள்ளூராட்சி சபைகளில் வெற்றி பெற்று நமது கட்சியின் பலத்தை நிரூபிக்க வேண்டும் என தெரிவித்தார்.

# சட்டத்திலுள்ள குறைபாடுகளை பயன்படுத்தி தப்பமுடியாது

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா

▪ கியாஸ் ஷாபி

சட்டத்தில் உள்ள குறைபாடுகளை பயன்படுத்திக் கொண்டு எவரும் தப்பிக்க முடியாத வகையிலே கைதுகள் இடம்பெறுவதாக வெளி விவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதி அமைச் சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித் தார்.

திருகோணமலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டார்.

அதன்பின்னர் கருத்து தெரிவித்த, பிரதிஅமைச்சர், தற்போது நாட்டில் அடிக்கடி கைதுகள் இடம்பெறுவதாக ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே, அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

கைது செய்தாலும், ஏன் கைது செய்கிறீர்கள் எனவும், கைது செய்யாவிட்டாலும் ஏன் கைது செய்யப்படவில்லை எனவும் ஊடகவியலாளர்களே கேட்கின்றனர்.

அரசியல் ரீதியாக எவரும் பழி வாங்கப்படவில்லை. ஊழலோடு சம்பந்தப்பட்ட, அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் தொடர்பாகவே முழுமையாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, கைது நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

2015 நல்லாட்சி காலத்தில், அவசரமாக போடப்பட்ட வழக்குகள் காரணமாக சிலர் தப்பித்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் தேடுகின்றனர். குற்றவாளிகளுக்கு சரியான விசாரணைகளும், உரிய தண்டனைகளும் வழங்கப்படும். இதில் பாகுபாடுகள் எதுவும் காட்டப்பட மாட்டாது.

இதன் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பிரத்தியேக மெய்பாதுகாவலர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். சொத்துக்குவிப்பு, கருப்பு பணம் தொடர்பாக இவர் விசாரணைக் உட்படுத்தப்பட்டார்.

அரசாங்கம் தேர்தல் காலங்களில் அளித்த வாக்குறுதிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கடந்த அரசாங்க காலங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளுக்கு நிரந்தர தீர்வு எட்டிய பின்னரே, இந்த நாட்டை சாதாரண நிலைக்கு கொண்டு வர முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தபால் சேவகருக்கு சேவை நலன் பாராட்டு விழா



▪ செல்லையா-பேரின்பராசா

கல்முனை பிரதம தபாலகத்தில் முப்பத்தாறு வருட காலம் தபால் சேவகராக கண்ணியமான சேவையாற்றி அரச சேவையில் இருந்து இளைப்பாறிய பெரியதம்பி தவராசாவுக்கான சேவை நலன் பாராட்டு விழா கல்முனை பிரதம தபாலகத்தில் பிரதம தபாலதிபர் ஏ.அஹமட் லெப்பை தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தபால் சேவகர் தெ.ஜீவராசா தபாலக காசாளர் எஸ்.எல்.காலித் ஆகியோர் விழா நாயகனை மாலை அணிவித்து கௌரவித்ததுடன் இவரின் சிறப்பான சேவை பற்றி வியந்து பாராட்டிப் பேசினர். இந் நிகழ்வில் விழா நாயகனின் துணைவியார் மற்றும் பிள்ளைகள் கலந்து சிறப்பித்தனர்.

# அட்டாளைச்சேனையில் எலிக்காய்ச்சல் தொடர்பாக விழிப்புணர்வு நடைபவனி

▪ றியாஸ் ஆதம்

எலிக்காய்ச்சலில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டு எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் முன்னெடுத்து வருகின்றது.

இதற்கிணங்க அட்டாளச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் பாலமுனை விவசாய அபிவிருத்தி நிலையம் மற்றும் கமநல சேவை நிலையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நடைபவனி நேற்றுமுன்தினம்(30) அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விவசாய அபிவிருத்தி நிலையம் மற்றும் கமநல சேவை நிலையம் என்பவற்றின் உத்தியோகத்தர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலைக்கு முன்னால் ஆரம்பித்த குறித்த நடைபவனி பிரதான வீதி ஊடாக அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலை வரை சென்றடைந்தது. இதில் கலந்துகொண்டவர்கள் எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தியவாறு சென்றதுடன் துண்டுபிரசுரங்களையும் வழங்கிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.




## நூல்கள் அறிமுகம்



▪ றிபாஸ்

இலங்கை சமாதான கற்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளரும், அக்கரைப்பற்று – கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் தலைவருமான எஸ்.எல்.றியாஸ் எழுதிய நூல் அறிமுகம் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட சாரணர் சங்கத்தின் ஆணையாளர் எம்.ஐ.உதுமா லெப்பை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கடந்த 20 ஆண்டுகளாக எழுதப்பட்ட 'நேற்முக பரீட்சையின் நுட்பங்கள்' எனும் 40 நூல்களை அறிமுகம் செய்து வைத்து சங்கத்தின் உயர் சபையினருக்கு றியாஸினால் வழங்கி வைக்கப்பட்டது.

# வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பு

▪ றிபாஸ்

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் நற்பிட்டிமுனை பிரதேசத்திற்கு விஜயம் செய்துள்ளார். கடந்த பொதுத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ /க்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில் அவர் அங்கு விஜயம் செய்து மக்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனைத் தொகுதி இளைஞர் அமைப்பாளர் சட்டத்தரணி சீ.எம். கலீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நற்பிட்டிமுனை பிரதேசத்தில் செய்யப்பட வேண்டிய கல்வி ரீதியான செயற்பாடுகள், மதஸ்தானங்களுக்கான உதவிகள், வாழ்வாதாரத் திட்டங்கள் போன்ற விடயங்களை எதிர்காலத்தில் முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார்.

# சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு கல்முனையில் கௌரவம்



▪ செல்லையா பேரின்பராசா

கல்முனை மாநகர சபையில் பணியாற்றும் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் மற்றும் தெருவோர தொழிலாளர்களை கல்முனை மெதடிஸ்த சேகர இறைமக்கள் தமது மெதடிஸ்த தேவாலயத்திற்கு வரவழைத்து, அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்பளித்து கௌரவித்தனர்.

இதனைத் தொடர்ந்து தொண்ணூறு பேருக்கு தலா ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை புத்தாண்டை முன்னிட்டு அன்பளிப்பு செய்தனர்.

கல்முனை மெதடிஸ்த சேகர முகாமைக்குரு அருட்திரு. ரவி முருகுப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் பிரதம அதிதியாகவும் இப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் (G.N) எஸ். அமலதாஸ் சிறப்பு அதிதியாகவும் இலங்கை மெதடிஸ்த திருச் சபையின் முன்னாள் உப தலைவரும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் முன்னாள் அதிபருமான வடிவேல் பிரபாகரன் அழைப்பு அதிதியாகவும் கலந்து கொண்டு இத் தொழிலாளர்களின் அர்ப்பணிப்பான சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.இந் நிகழ்வில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றமை சிறப்பம்சமாகும்.

# 'நற்பிட்டிமுனைத் தமிழர் வரலாற்றுச் சால்புகள்' நூல் வெளியீடு







▪ செல்லையா பேரின்பராசா

நற்பிட்டிமுனையைச் சேர்ந்த சஞ்சீவி சிவகுமார் எழுதிய" நற்பிட்டிமுனைத் தமிழர் வரலாற்றுச் சால்புகள்" எனும் வரலாற்று நூலின் வெளியீட்டு விழா அண்மையில் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பின் வெளியீடாக வெளிவந்த இந் நூல் வெளியீட்டு விழாவுக்கு அதன் தலைவர் க.ருத்திரமூர்த்தி ஆசிரியர் தலைமை தாங்கினார்.

இவ்விழாவின் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு அதிதிகளாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ், எழுத்தாளர் தமிழ்மணி உமா வரதராஜன் மற்றும் வரலாற்று ஆய்வாளர் கலாநிதி கவிக்கோ வெல்லவூர்க் கோபால் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# மாகாண சபைக்குரிய பாடசாலைகளில் ஒரு ஊழியர் கூட இல்லாத நிலை

## மத்திய மாகாண கல்வி திணைக்களம் தெரிவிப்பு

( எம்.ஏ.அமீனுல்லா )

கண்டி மாவட்டத்தில் பல தேசிய பாடசாலைகளில் மேலதிகமான ஊழியர்கள் காணப்படுகின்ற போதிலும், மாகாண சபைக்குரிய பல பாடசாலைகளில் ஒரு ஊழியர் கூட இல்லாத நிலை காணப்படுவதாக மத்திய மாகாண கல்வி திணைக்களம் தெரிவித்துள்ளது.

கண்டியில் உள்ள தர்மராஜா, உயர்தர பெண்கள், மஹாமாயா, கிங்ஸ் வூட் உள்ளிட்ட தேசிய பாடசாலைகள் பலவற்றில் 10-25 ஊழியர்கள் உள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது அகிலவிராஜ் காரியவசம் கல்வி அமைச்சராக இருந்த போது நியமிக்கப்பட்டவர்கள் எனவும் அறியமுடிகின்றது.

கண்டி மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகளுக்கு நியமனம் பெற்று குருநாகல் மாவட்டத்தின் கல்விசாரா ஊழியர்கள் குறிப்பிட்ட பாடசாலைகளில் இணைப்பு அடிப்படையில் குருநாகல் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தமது சேவையைச் செய்து சம்பளத்தை மாத்திரம் கண்டி மாவட்டத்தில் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாணத்தில் , மாகாண சபை பாடசாலைகளில் கல்விசாரா சேவையைச் சேர்ந்த குறிப்பிட்ட சில துறைகளுக்கான ஆளணி பற்றாக்குறை பாரியளவில் காணப்படுகின்றது.

ஆகவே, தேசிய பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஊழியர்களை மாகாண சபை சேவைக்கு இணைத்துக் கொள்ள முடியுமாகவிருந்தால் பிரச்சினையை எளிதில் தீர்க்க முடியும் என மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் நிஹால் அழககோன் குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் வலியுறுத்தினார்.

# அன்பையும் மகிழ்வையும் பகிர்ந்து கொள்ளும் ஆண்டாக அமையட்டும்

## -இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்



மலர்ந்துள்ள இந்த புதுவருடம் அனைத்து மக்களுக்கும் செழிப்பானதும் மகிழ்ச்சிகரமானதுமாக அமையட்டும் என இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

“ஒரு புதிய வருடத்திற்குள் காலடி எடுத்து வைக்கும் இத்தருணத்தில் இவ்வருடமானது மக்களுக்கு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பினையும் கொண்டு வருகிற ஆண்டாக அமைய எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

கடந்த வருடத்தில் நாம் கற்றுக்கொண்ட சாதக, பாதக விடயங்களை இந்த ஆண்டின் படிப்பினைகளாகக் கொண்டு எமது வாழ்வினை வளப்படுத்திக் கொள்வதற்குப் பயனாக்கிக் கொள்ளும் அதேவேளை மற்றவர்களின் வாழ்விலும் நன்மையைக் கொண்டு வருகமாகவும் பயன்படுத்திக் கொள்வோமாக.

மேலும் சமூகத்தில் அனைவரும் அன்பையும் மகிழ்ச்சியையும் இவ்வருடத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என நான் பிரார்த்தனை செய்கிறேன்.

நீதி மற்றும் சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில் பிரிக்க முடியாத பிளவுபடாத ஒருமித்த நாட்டிற்குள் ஒற்றுமையாகவும்,நல்லிணக்கத்துடனும் இருந்திட இப் புத்தாண்டிலிருந்து அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள் மற்றும் மக்கள் ஆகிய நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.“ எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தந்தையும், இளைய மகனும் தாக்கியதில் சகோதரர் பலி

## டன்சினன் தோட்டத்தில் சம்பவம்

( க.கிஷாந்தன் )

தந்தையும், இளைய மகனும் இணைந்து மூத்த மகனை பொல்லால் அடித்துக் கொலை செய்துள்ளதாக பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டன்சினன் தோட்டத்தின் கீழ் பிரிவு பகுதியில் வசிக்கும் சிக்கன் நடேசன் நவின்குமார் என்ற 25 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

(30) அன்று மாலை, தந்தையும், மூத்த மகனும் அதிக மது அருந்தியுள்ளனர். பின்னர் தந்தை வீட்டிற்கு வந்தபோது, மூத்த மகன் வீட்டில் அதிக ஒலியில் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்துள்ளார்.

தந்தை மகனிடம் ஒலியைக் குறைக்கச் சொல்ல, கோபமடைந்த மகன் தந்தையைத் தாக்கியுள்ளார், பின்னர் தனது தம்பியையும் கட்டையால் தாக்க, கடைசியில் தம்பியும், தந்தையும் சேர்ந்து குறித்த மூத்த மகனை பொல்லுகளால் அடித்து கொலை செய்துள்ளதாகக் கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கியதில் காயமடைந்த தந்தையும் (வயது 46), தம்பியும் (வயது 16) பொலிஸ் பாதுகாப்பில் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





படுகொலை செய்யப்பட்ட மூத்த மகன்

படுகொலை செய்யப்பட்ட ஒரு பிள்ளையின் தந்தையின் சடலம் நீதவானின் ஸ்தல பரிசோதனையின் பின்னர் பிரேதப் பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மின்சார கட்டண திருத்த அறிக்கை ஜனவரியில் வெளியிடப்படும்

## ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க

( எம்.ஏ.அமீனுல்லா)

உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சார கட்டணம் தொடர்பில் மின்சார சபை முன்மொழிந்துள்ள திருத்தங்கள் மற்றும் அது தொடர்பில் மின்சார பாவனையாவார்களின் ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை ஜனவரி 17 ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனவரி 10 ஆம் திகதி வரை மாகாண மட்டத்தில் மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்படும் எனவும், மாகாண மட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் அனைத்து மக்களின் கருத்துக்களையும் பரிசீலித்து உரிய அறிக்கை வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மின்சார சபையினால் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அறிவிக்கப்படவுள்ள மின்சார கட்டண திருத்தம் தொடர்பான மத்திய மாகாண பங்குதாரர்களின் ஆலோசனை அண்மையில் கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார். மத்திய மாகாண மின்சார நுகர்வோர் உட்பட 60 பங்குதாரர்கள் மின்சார கட்டண திருத்தத்தின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை முன்வைத்திருந்தனர். மின்சார சபை டிசம்பர் 06, 2024 அன்று, ஜனவரி 2025 முதல் திருத்தப்பட உள்ள மின் கட்டணத் திருத்தங்கள் குறித்து பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்குத் தெரிவித்ததுடன், பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மாகாண மட்டத்தில் மின்சார நுகர்வோரின் கருத்துக்களை ஆராயத் தொடங்கியது.

மாகாண மட்டத்தில் பொதுமக்களின் கலந்தாய்வுக்கான முதலாவது நிகழ்ச்சித் திட்டம் மத்திய மாகாணத்தில் கடந்த 27ஆம் திகதி ஆரம்பமானதுடன் ஊவா மாகாணத்தில் பொது கலந்தாய்வு (30) ஆரம்பமானமை குறிபிபிடத்தக்கது.

# இரத்தினபுரி மாவட்டத்தை மையப்படுத்தி தேசிய மீலாதுன் நபி விழா

( எம்.எஸ்.எம்.ஸாகிர் )

2024 ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாதுன் நபிவிழா இரத்தினபுரி மாவட்டத்தை மையமாகக் கொண்டு இம்முறை 40 ஆவது தேசிய மீலாதுன் நபி விழாவாகக் கொண்டாடப்பட்டது.

இரத்தினபுரி பள்ளிவாசல், இரத்தினபுரி ஜன்னத் பள்ளிவாசல், பலாங்கொடை பள்ளிவாசல் ஆகிய பள்ளிவாசல்களை முக்கியத்துவப்படுத்தி தபால் உறையும் முத்திரையும் வெளியிடப்பட்டது.

இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன தலைமையில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸின் வழிகாட்டலில் இரத்தினபுரி சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் யிலான கஸீதா, கிராஅத் மற்றும் கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 425 மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டதோடு இஸ்லாமிய கலை, கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந்த 2024 ஆம் ஆண்டுக்கான






அண்மையில் நடைபெற்ற நிகழ்வில், தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் டி. சுனில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடை தேசிய மீலாதுன் நபிவிழாவில், இரத்தினபுரி மாவட்டத்தில் இருபது முஸ்லிம் பள்ளிவாசல்களின் அபிவிருத்திக்காக 100 இலட்சம் ரூபா முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

# நாளை கட்டிட திறப்பு விழா

( பீ.எம் முக்தார் )

பேருவளை மருதானை அல்–பாஸியத்துல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலையில் மர்ஹூம் நாஸிம் பாச்சா மரிக்கார், மர்ஹூமா சித்தி ஹதீஜா ஆகியோரின் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத் திறப்பு விழா நாளை 2ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வகுப்பறை கட்டிடத் திறப்பு விழா அதிபர் திருமதி யெஹியா ஹுதைர் தலைமையில் நடைபெறவுள்ளது.

மர்ஹூம் நாஸிம் பாச்சா மரிக்கார் தம்பதிகளின் பிள்ளைகள் புதிய கட்டிடத்தைத் திறந்து வைக்கவுள்ளனர். நான்கு மாடிகளைக் கொண்ட இக் கட்டிடத்தில் இரு மாடிகள் பூர்த்தி செய்யப்பட்டு முதல் கட்டமாகத் திறந்து வைக்கப்படுகிறது.

மேற்படி, பாடசாலையில் நிலவும் இடப் பற்றாக்குறைக்கு ஓரளவு தீர்வு பெற்றுக் கொடுக்கும் வகையில் இவர்களது பிள்ளைகளினால் பாடசாலைக்கு அருகே காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டு நான்கு மாடிகளைக் கொண்ட கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் இரு மாடிகளின் நிர்மாண வேலைகள் தற்போது பூர்த்தியாகியுள்ளன.

# சட்டங்களால் கட்டுப்படுத்த முடியாத நிலையில் முகநூல்கள்

## ஓய்வுபெற்ற கல்வியாளர் பந்துல பி.தயாரத்ன

( எம்.ஏ.அமீனுல்லா )

நண்பர்களை அடையாளம் கண்டு, நட்பை வளர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட முகநூல், இன்று வெறுப்புக்களை விதைக்கவும் நூலாகும் குரோதங்களைப் பரப்புவதற்கும், மக்களை இழிவு படுத்துவதற்கும் மற்றும் அவதூறு செய்வதற்கும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறமை கண்டறியப்பட்டுள்ளதாகத் தேசிய கல்வி நிறுவகத்தின் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகளுக்கான ஆலோசகரும் ஓய்வுபெற்ற கல்வியாளருமான பந்துல பி.தயாரத்ன தெரிவித்துள்ளார். சட்டங்களால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



மத்திய மாகாண கல்வி அமைச்சும் மாகாண ஊடகப் பிரிவும் இணைந்து நடத்திய “லோவக் தினன தருவோ” பாடசாலை ஊடகப் போட்டியின் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு பல்லேகல மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.தொடர்ந் துரையாற்றிய அவர், தற்போது இணைய ஊடகங்களைக் கட்டுப்படுத்த முறையான விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

# செயற்கை நுண்ணறிவில் நூலக சேவைகள்

( ஹஸ்பர் ஏ.எச் )

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் நூலகர்கள் மற்றும் நூலக உதவியாளர்களின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு செயற்கை நுண்ணறிவு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கிழக்கு முகாமைத்துவ அபிவிருத் திப் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் ே. ஆ. நௌபீஸின் அறிவுறுத்தலுக்கமைவாக செயற்கை நுண்ணறிவு கருவிகளைக் கொண்டு நூலக சேவைகளை மேம்படுத் தல் பயிற்சி நெறியானது திருகோண மலை யில் உள்ள கிழக்கு மாகாண முகா மை த்துவ அபிவிருத்தி பயிற்சிப்பிரி வின் விரிவுரை மண்டபத்தில் திங்கட்கிழ மை (30) நடைபெற்றது.

இப்பயிற்சி நெறிக்கு வளவாளராக கிழக்குப் பல்கலைக்கழ கத்தின் சிரேஷ்ட உதவி நூலகர் N.ஆ.ரவி க்குமார் கலந்து கொண்டார்.

# கட்சித் தலைமையை வலியுறுத்தி 12 முக்கிய பரிந்துரைகள் முன்வைப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மார்க்கர், ஐக்கிய மக்கள் சக்தியின் விரிவான மறுசீரமைப்பைத் தொடங்குமாறு கட்சித் தலைமையை வலியுறுத்தி 12 பரிந்துரைகளை முன்வைத்துள்ளார்.

இவர், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அடிமட்ட உறுப்பினர்களுடனான அதன் தொடர்பை வலுப்படுத்தும் நோக்கத்துடன், தலைமைக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே வலுவான உறவைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் விரிவான மறுசீரமைப்பை அவர் கோரியுள்ளார்.

இம்தியாஸ் பாக்கீர் மார்க்கர் இதற்காக 12 முக்கிய பரிந்துரைகளை முன்வைத்துள்ளார்.

கட்சியின் சித்தாந்தத்தை வெற்றிகரமாக சமூகமயமாக்க அனுமதிக்கும் வகையில், கட்சியின் உறுப்பினர்கள் மேலிருந்து கீழாக ஒரே குழுவாகத் தொடர்புகொள்வதை உறுதிசெய்ய, அதன் கருத்தியல் நிலைப்பாட்டை ஒருங்கிணைக்க ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்துகிறது.

ஐக்கிய மக்கள் கட்சிக்குள் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலுப்படுத்துவதற்கு கூட்டாக தீர்மானங்கள் எடுக்கப்பட



வேண்டும், உறுப்பினர்களை பொறுப்புகளை ஒப்படைப்பதிலும், முடிந்தவரை வாக்கெடுப்பு நடத்துவதன் மூலமும் இளைஞர்கள் மற்றும் மாணவர் அமைப்புகள் மூலம் இயற்கையான தலைமையை வளர்க்கவும், அதே நேரத்தில் வெளிப்புற செல்வாக்கு செலுத்துபவர்கள் அல்லது "பரசூட்டிஸ்டுகள்" மீது தங்கியிருப்பதைத் தவிர்க்கவும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி அமைப்பாளர்கள் மற்றும் செயற்குழு மற்றும் கட்சி மாநாடு உள்ளிட்ட குழுக்களுக்கான முறையான மற்றும் சரியான நேரத்தில் கூட்டங்களை நடத்துதல்.

மாவட்டத் தலைவர்களுக்குக் குறிப்பிட்ட பொறுப்புகளை ஒதுக்கி, பொறுப்புக்கூறலை அதிகரிக்க அவர்களின் முன்னேற்றம் குறித்து காலாண்டு மதிப்பாய்வை நடத்துங்கள்.

கட்சித் தலைவர், முக்கிய அதிகாரிகள் மற்றும் இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள் மற்றும் தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் போன்ற தொடர்புடைய அமைப்புகளின் தலைவர்களை உள்ளடக்கிய வழக்கமான முன்னேற்ற மதிப்பாய்வுகளை நடத்துங்கள்.

தகவல்தொடர்புகளை திறம்பட நிர்வகிக்க பிரத்தியேக சமூக ஊடகப் பிரிவை நிறுவவும் மற்றும் தேர்தல் சார்ந்த தற்காலிக செயல்பாடுகளை கட்டமைக்கப்பட்ட தகவல் தொடர்பு திட்டத்துடன் மாற்றவும். கட்சியின் கருத்தியல் செய்திகள் மற்றும் தற்போதைய பிரச்சினைகள் குறித்த நிலைப்பாடுகள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இருவரையும் சென்றடைவதை உறுதி செய்யவும்.

15 முதல் 17 வயது வரையிலான தனிநபர்களை இலக்காகக் கொண்ட திட்டங்களை உருவாக்குவதன் மூலம் இளம் வாக்காளர்களை ஈடுபடுத்தவும், அவர்களுக்கு அரசியல் புரிதலை வழங்கவும், வரவிருக்கும் தேர்தல்களுக்கு முன்னதாக அவர்களின் ஈடுபாட்டை வளர்க்கவும்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கும், தொழில் வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சமூகத் தலைவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் தெளிவான அளவுகோல்களை நிறுவுதல்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் இளைஞர்கள் மற்றும் பெண்க ளுக்கு குறைந்தபட்சம் 25% பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல்.

முந்தைய தேர்தல்களில் தோல்வியடைந்த வேட்பாளர்களின் மறு நியமனத்தை 35% ஆகக் கட்டுப்படுத்தவும்.

தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் வட்டாரப் பிரதிநிதிகள் கட்சித் தலைவர் மற்றும் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து அணுகலை மேம்படுத்த குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள் இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டு. மாவட்டத்தில் சீன அரசு உலர் உணவு பொதிகள் வழங்கிவைப்பு



**ஏ.எச்.ஏ.ஹுஸைன்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி உலர் உணவுப் பொதிகள் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜுலேகாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு வந்த சீனத் தூதுவர் கி சென்கொங் (Qi zhenhong) தலைமையிலான தூதுக் குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக "சீனாவின் சகோதர பாசம்" எனும் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வைத்து 770 உலர் உணவுப் பொதிகள் மாவட்டச் செயலாளரிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நிவாரணப் பொதிகள் முதல் கட்டமாக மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குறப்பட்ட பெரிய உப்போடை கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு 6.500 ரூபாய் பெறுமதியான பொதிகள் பகிர்ந்தளித்தளிக்கப்பட்டன.மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான சீனா தூதுவர் கீ சென்ஹொங்க்கு மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்ரினா ஜுலேக்கா நினைவுச் சின்னம் ஒன்றினையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சீனத் தூதுவரின் பாரியார் ஜின் குவான், கிழக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலளார் கே.எம். அப்துல்லாஹ், மேலதிக அரசாங்க அதிபர்களான சுதர்ஷினி சிறிகாந்த், நவரூபரஞ்ஜினி முகுந்தன், சீனத் தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சர்வதேச இரத்தினக்கல் கண்காட்சி

**பீ.எம் முக்தார்**



பேருவளை சீனங்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் பூரண ஏற்பாட்டிலும், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பூரண அனுசரணையுடனும் "GEM SRI LANKA 2025" சர்வதேச மாணிக்கக் கல் மற்றும் ஆபரணக் கண்காட்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த சர்வதேச கண்காட்சியானது இம்மாதம் 08, 09 மற்றும் 10ஆம் திகதிகளில் சினமன் பெந்தோட்ட பீச் –சிக்நேச்சுர் செலக்சன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

மேலும் இக்கண்காட்சியில் இலங்கையின் முன்னணி இரத்தினக்கல் வியாபாரிகள், உள்நாட்டு, வெளிநாட்டு மாணிக்க கல் பிரபல ஏற்றுமதியாளர்கள் உட்பட பல துறை சார்ந்த பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையின் மாணிக்க கல் வர்த்தகத்தை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் முயற்சியாக 02வது தடவையாகவும் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01வது கண்காட்சி நடைபெற்றதோடு, உள்நாட்டு, வெளிநாட்டு முன்னணி இரத்தினக்கல் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்க தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மர்ஜான் பளீல், ஜெம் ஸ்ரீலங்கா (GEM SRI LANKA) தலைவர் ஹில்மி காஸிம் உட்பட சங்க உறுப்பினர்களின் முழுமையான ஒத்துழைப்போடும் 2024 கண்காட்சி மிக வெற்றிகரமாக நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# எரிகாயங்களுடன் மீட்கப்பட்ட தாயும் மகளும் உயிரிழப்பு



**எம்.ரீ.ஆரிப்**


தலாவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட குடாவெவ பிதுங்கட பிரதேசத்தில் எரிகாயங்களுடன் மீட்கப்பட்ட தாயும் மகளும் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர்.

குடாவெவ பிதுங்கட பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயும் 2 வயது பெண் குழந்தையும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் (30) பிற்பகல் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் அயலவர்களின் உதவியுடன் தாயும் மகளும் குடா நெலுபேவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் தலாவ பொலிசார் தெரிவித்தனர்.

நிரோஷானி மஞ்சுளா 39 மற்றும் கிஹன்சா மற்றும் தஹம்தீ 2 வயது குழந்தையுமே உயிரிழந்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விரிவான விசாரணைகளை தலாவ பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரிசி – வெற்றிலை லொறிகள் நேருக்கு நேர் மோதி விபத்து; ஐவர் காயம்



**எம்.ரீ.ஆரிப்**

பொலன்னறுவை வெலிகந்த சிங்கபுர 30ஆவது மைல் கல் பகுதியில் அரிசி லொறி ஒன்றும் வெற்றிலை ஏற்றிச்சென்ற லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் வெற்றிலை லொறியில் சென்ற ஐவர் காயமடைந்து வெலிகந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சிங்கபுர அரிசி ஆலையில் இருந்து அரிசியை ஏற்றிக்கொண்டு பொலன்னறுவை நோக்கி பயணித்த லொறி ஒன்று பொலன்னறுவையில் இருந்து சிங்புரவிற்கு வெற்றிலை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியுள்ளதாக வெலிகந்த பொலிசார் தெரிவித்தனர்.

சிங்கபுர வீதியில் சாய்ந்து கிடந்த மரக்கிளை ஒன்றில் இருந்து தவிர்க்க முற்பட்ட போது அரிசி லொறியின் முன்னால் வந்த வெற்றிலை லொறியுடன் மோதியதில் இரண்டு லொறிகளும் விபத்திற்குள்ளானதாக இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் வெலிகந்த பொலிசார் தெரிவித்தனர்.

# நிம்மதி மேலோங்க





**4ஆம் பக்கத் தொடர்...**

கொள்கின்றார்கள் என்ற மர்மத்தை விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் இடித்துரைக்கின்றனர்.

அதேவேளை, அன்பும் இரக்கமும் அத்தியாவசியமானவை, அவை மறைத்து வைக்க வேண்டிய மர்மப் பொருள்களல்ல. அன்பும் இரக்கமும் இன்றி இவ்வுலகில் மனிதரும் ஏனைய ஜீவராசிகளும் கொடி செடி மரங்களும் கூட உயிர்வாழ முடியாது.

மரம் செடி கொடிகள், மனிதர்கள் காட்டும் எந்தவிதமான வேறுபாடுகளுக்கும் அப்பால் இயற்கை நியதியின் கீழ் இயல்பாக வளர்கின்றன. பாகுபாடு காட்டும் மனித குலம் கற்றுக்கொள்ள வேண்டிய சிறந்த பாடம் இயற்கையிடம் நிறைய இருக்கின்றது.

எல்லா இழப்புக்களையும் ஓரளவு ஈடுசெய்யக் கூடியதாக இருந்தாலும் இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டையும் நிரந்தர அமைதியையும் தோற்றுவிப்பதுதான் அவசரமும் அவசியமும் ஆகும்.

நாம் எல்லோரும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

இந்த விடயத்தில் எமது கசப்பான கடந்தகால நிகழ்வுக ளின் அனுபவங்கள் எந்த சமுதாயத்தையும் குறிவைத்துக் குற்றம் சுமத்துவதாக அமைந்து விடக்கூடாது.

குற்றம் சுமத்துவதற்கும் பழிவாங்க முயற்சிப்பதற்கும் பகைமை பாராட்டுவதற்கும் பதிலாக எதிர்காலத்தை ஒற்றுமையைக் கட்டியெழுப் புவதற்கான ஆக்கபூர்வமான வழிமுறைகளாக இனம் காண்பதே எமது பிரதான இலக்காகவும் முயற்சியாகவும் இருக்க வேண்டும்.

அடுத்த சமூகத்தாரோடு அந்யோன்யமாக வாழ்ந்தவர்கள் தமது பூர்வீகப் பூமிகளிலிருந்து விரட்டப்பட்டு, அவர்களது சிறார்கள் அகதிகளாகப் பிறந்து, அகதி முகாம்களிலேயே வளர்ந்து, அங்கேயே திருமணம் முடித்து அகதி முகாம்களிலேயே குடித்தனம் நடத்தும் துர்ப்பாக்கிய நிலை இலங்கைச் சமூகங்களுக்கு ஏற்பட்டு இப்பொழுது கால் நூற்றாண்டைக் கடந்துகொண்டிருக்கின்றோம்.

எனவே, இப்பொழுது கிடைத்துள்ள அரிய வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்தி நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களும் நன்மை பெறக்கூடியதாக வழிவகை செய்யப்பட வேண்டும் என்பதையே எல்லோரும் புதிய ஆண்டில் எதிர்பார்க்கிறார்கள்.

தேசத்தையும் மக்களையும் எழுச்சி மிக்க ஒரு வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வது இன்றியமையாதது. அது கிடைக்கவில்லையாயின் அங்கு துயரமும், சோர்வும், அவநம்பிக்கையும், ஏக்கப் பெருமூச்சும் இறுதியில் விரக்தியும் அழிவும்தான் மிஞ்சும்.

எதிர்வரும் ஆண்டு இதுவரை விடைபெற்றுள்ள ஆண்டுகளை விட ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும் என்பதுதான் அனைவரதும் ஆதங்கம். ஆனால், அதனை அடைந்து கொள்வது அவ்வளவு எளிதானதல்ல சவால்கள் நிறைந்தது.

எதிர்வரும் ஆண்டு நாட்டிலுள்ள சகல சமூகங்களினதும் கனவுகளை அடைந்துகொள்வதை நோக்கி தன்னம்பிக்கையுடன் பயணிப்பதற்கான உத்வேகத்தை அளிக்கும் என நாம் உறுதியாக நம்பும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

முதலில் "இலங்கை நம் தாய் நாடு" என்று அனைவரும் உரிமை கோரக்கூடிய ஒரு நாட்டை உருவாக்க வேண்டும்.

**அநீதியைக் களைந்து அனைவருக்கும் நீதியை உறுதிசெய்ய வேண்டும்:**

ஆழமான ஆக்கபூர்வமான அரசியல் சீர்திருத்தங்கள், ஊழலுக்கு முற்றுப்புள்ளி, திருட்டு அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஆகியோர் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறல் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு புதிய அரச நிருவாகம் பயணிக்க வேண்டும். இவற்றை நிறைவேற்றத் தவறினால் எதிர்காலம் எவ்வளவு சகிப்புத் தன்மை கொண்டதாக இருக்கும் என்பதில் தெளிவில்லை.

விரக்தி, வெறுப்பு, நெருக்கடியினூடே 2024ஆம் ஆண்டு விடைபெறட்டும், அதேவேளை வரும் 2025ஆம் ஆண்டு வளம் பொங்க வரமருளட்டும் என்றே கனத்த இதயத்தோடு காத்திருக்க வேண்டியுள்ளது.


# குற்றஞ்சாட்டப்பட்ட தென் கொரிய ஜனாதிபதி யூனுக்கு பிடியாணை

கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி இராணுவச் சட்டத்தை விதிக்க முயற்சித்ததற்காக தென்கொரியாவின் இடைநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் யோலுக்கு (Yoon Suk Yeol) எதிராக சியோல் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கிளர்ச்சி மற்றும் தேசத்துரோக குற்றச்சாட்டுகள் தொடர்பாக பல விசாரணைகளை எதிர்கொண்டுள்ள யூன், கடந்த இரண்டு வாரங்களாக விசாரணைக்கு ஆஜராகுமாறு மூன்று அழைப்பாணைகளை புறக்கணித்ததை அடுத்து இந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை இரவு, புலனாய்வாளர்கள் யூனுக்கு கிளர்ச்சி மற்றும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் விசாரணைக்காக கைது செய்ய பிடியாணை உத்தரவினை நாடினார். தென்கொரியா குறுகிய கால இராணுவச் சட்டப் பிரகடனத்திலிருந்து அரசியல் நெருக்கடியில் உள்ளது. யூன் மற்றும் அவரை அடுத்து செயல் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட ஹான் டக்-சூ இருவரும் நாடாளுமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டனர். தென் கொரியாவில் இவ்வாறு குற்றம் சாட்டப்பட்ட முதல் ஜனாதிபதி யூன் ஆவார். அவரை காவலில் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு நீதிமன்றம் 48 மணி நேரம் அவகாசம் அளித்துள்ளது.

எவ்வாறெனினும், புலனாய்வாளர்கள் அவரது பாதுகாப்புக் குழு மற்றும் எதிர்ப்பாளர்களால் பிடியாணை உத்தரவு முறியடிக்கப்படலாம் என்பதால், விசாரணையாளர்களால் அதனை நிறைவேற்ற முடியுமா என்பது தெளிவாக இல்லை. நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட சோதனைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி அலுவலக மற்றும் யூனின் தனிப்பட்ட இல்லம் ஆகியவற்றிற்குள் புலனாய்வாளர்கள் நுழைவதை ஜனாதிபதி பாதுகாப்பு சேவை முன்னர் தடுத்திருந்தது.

இதனிடையே திங்கட்கிழமை யூனின் சட்டக் குழு, இராணுவச் சட்டத்தை அறிவிப்பது ஜனாதிபதியின் அரசியலமைப்பு அதிகாரத்திற்குள் இருப்பதால், விசாரணையாளர்களுக்கு அவரைக் கைது செய்ய அதிகாரம் இல்லை என தெரிவித்தது. இவ்வாறான பின்னணியில் யூன் எங்கிருக்கிறார் என்பது பகிரங்கமாக தெரியவில்லை, ஆனால் அவர் நாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது. அவரை பதவி நீக்கம் செய்ய சட்டமியற்றுபவர்கள் வாக்களித்த பின்னர், டிசம்பர் 14 முதல் அவர் ஜனாதிபதி பணிகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டாலும், நாட்டின் அரசியலமைப்பு நீதிமன்றத்தால் அவரது பதவி நீக்கம் அமுல்படுத்தினால் மட்டுமே அவரை பதவியில் இருந்து நீக்க முடியும்.



யூன் இடைநீக்கம் செய்யப்பட்ட பின்னர், பதில் ஜனாதிபதி பதவிக்கு வந்த ஹானை பதவி நீக்கம் செய்ய எதிர்க்கட்சி கடந்த வாரம் வாக்களித்தது.இப்போது, தற்போதைய ஜனாதிபதி மற்றும் தற்காலிகப் பிரதமராக நிதியமைச்சர் சோய் சாங்-மோக் செயற்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சீன ஹெக்கர்களால் திறைசேரி முடக்கப்பட்டதாக அமெரிக்கா குற்றச்சாட்டு




சீனாவின் உளவுத்துறை நிறுவனங்களில் ஒன்று அமெரிக்க திறைசேரி திணைக்களத்தை ஹேக் செய்து, அரசாங்க ஊழியர்களின் பணிநிலையங்கள் மற்றும் வகைப்படுத்தப்படாத ஆவணங்களை அணுகியதாக ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான நிர்வாகம் தெரிவித்தது.

இது முக்கிய அமெரிக்க நிறுவனங்களுக்கு எதிரான தொடர்ச்சியான இக்கட்டான கண்காணிப்பு நடவடிக்கைகளில் அண்மைய சம்பவம் ஆகும். டிசம்பர் மாதத்தின் ஆரம்பத்தில் இந்த ஊடுருவல் நிகழ்ந்தது. சம்பவம் குறித்து சட்டமியற்றுபவர்களுக்கு அறிவிக்கும் வகையில் திறைசேரியால் எழுதப்பட்ட கடிதத்தில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது. இது குறித்து விரிவான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய பாதுகாப்பு அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதாகவும் அமெரிக்க உளவுத்துறை (FBI) அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனிடையே, வோஷிங்டன் டிசியில் உள்ள சீன தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் இந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்ததுடன், இது தொடர்பான எந்த ஆதாரமும் முன்வைக்கப்படவில்லை என்று தெரிவித்தார். திறைசேரி அதிகாரி ஒருவர், கடந்த டிசம்பர் 8 ஆம் திகதி மூன்றாம் தரப்பு மென்பொருள் சேவை வழங்குநரால் சில கருவூல பணிநிலையங்கள் மற்றும் வகைப்படுத்தப்படாத ஆவணங்களை தொலைவிலிருந்து அணுகியதாக தெரிவித்தார். எவ்வாறெனினும், ஹெக்கின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு அமெரிக்க சைபர் செக்யூரிட்டி மற்றும் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் செக்யூரிட்டி ஏஜென்சி (CISA) மற்றும் FBI ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுவதாக திறைசேரி குறிப்பிட்டுள்ளது.




# இஸ்ரேலில் 16,000 இந்திய கட்டுமான தொழிலாளர்கள்

இஸ்ரேல் நாட்டில் கட்டுமான பணி மற்றும் விவசாயப் பணிகளில் மேற்குக்கரை மற்றும் காஸா முனையில் உள்ள பலஸ்தீனர்கள் வேலைக்கு பணியமர்த்தப்பட்டனர்.



கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் இஸ்ரேல் காஸா மீது போர் தொடுத்தது. அப்போது பலஸ்தீன ஊழியர்கள் இஸ்ரேல் நாட்டிற்குள் நுழைய இஸ்ரேல் அரசு தடைவிதித்தது. இதனால் மற்ற நாடுகளில் இருந்து கட்டுமான பணிக்கு ஆட்களை வரவழைக்க இஸ்ரேல் முயற்சி மேற்கொண்டது. அந்த வகையில் இந்தியாவில் இருந்து 16 ஆயிரம் கட்டுமான பணியாளர்கள் இஸ்ரேலில் பணிபுரிந்து வருவதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவை சேர்ந்த ராஜு நிஷாத் (வயது 35) என்பவர் மத்திய இஸ்ரேலில் உள்ள பீர் யாகோவ் என்ற இடத்தில் நடைபெறும் கட்டுமான பணியில் முன்னணி ஊழியராக திகழ்ந்து வருகிறார். அவருடன் ஏராளமான இந்தியர்கள் கட்டுமான உதவி பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அடிக்கடி ஏர் ரெய்டு வார்னிங் வரும். அப்போது பாதுகாப்பான இடத்திற்கு சென்று விடுவோம். எச்சரிக்கை ஒலி நின்றவுடன் நாங்கள் வேலையை மீண்டும் ஆரம்பிப்போம் எனவும் இங்கே இஸ்ரேலில் பயப்படக் கூடிய அளவிற்கு ஒன்றுமில்லை" என தெரிவித்துள்ளார். இஸ்ரேலில் கட்டுமான தொழிலில் ஈடுபடும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. இந்தியாவை விட மூன்று மடங்கு அதிகமாக கிடைப்பதே ஆயிரக்கணக்கான கி.மீ. கடந்து இஸ்ரேல் செல்ல முக்கிய காரணமாகும்.

நிக்ஷாத் சுமார் 16 ஆயிரம் பேர்களில் ஒருவர். இன்னும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலைக்கு அழைத்து வர இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. இஸ்ரேலில் பல தசாப்தங்களாக இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர், ஆயிரக்கணக்கானோர் வயதான இஸ்ரேலியர்களைப் பராமரிக்கும் பராமரிப்பாளர்களாகவும், மற்றவர்கள் வைர வியாபாரிகளாகவும், தொழினுட்ப நிபுணர்களாகவும் பணியாற்றுகின்றனர். ஆனால் காஸாவில் போர் தீவிரமடைந்ததிலிருந்து, இஸ்ரேலின் கட்டுமானத் துறைக்கும் இந்தியர்களைக் கொண்டுவருவதற்கான முயற்சியை ஆட்சேர்ப்பு நிறுவனங்கள் ஆரம்பித்துள்ளன.

ஹமாஸ் தாக்கலுக்கு முன்னதாக இஸ்ரேலில் 80 ஆயிரம் பலஸ்தீனர்கள் பணியாற்றி வந்தனர். அவர்களுடன் 26 வெளிநாட்டினரும் பணியாற்றி வந்தனர். தற்போது 30 ஆயிரம் வெளிநாட்டு தொழிலாளர்கள் இஸ்ரேலில் பணியாற்றி வருகிறார்கள். இந்தியா 5 ஆவது மிகப்பெரிய பொருளாதார நாடாக திகழ்கிறது. பொருளாதாரத்தில் விரைவாக வளர்ந்து வரும் நாடாக இந்தியா இருக்கும் நிலையில், இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு முழுநேர வேலை கொடுக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாகவே வெளிநாடுகளை நோக்கி தொழிலாளர்கள் நகர்ந்து செல்வதாக நிஷாத் தெரிவித்தார்.

# புகைக்கும் ஒவ்வொரு சிகரெட்டுக்கும் ஆயுளில் 20 நிமிடம் குறைகிறது

## ஆய்வில் வெளியான அதிர்ச்சி உண்மை

இங்கிலாந்து அரசின் உடல்நலம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறை மேற்பார்வையில் லண்டன் பல்கலைக்கழகம் (UCL) ஆராய்ச்சி ஒன்றை நடத்தியுள்ளது. அதில், புகைக்கும் ஒவ்வொரு சிகரெட்டும் மனிதன் தன் வாழ்நாளில் சராசரியாக 20 நிமிடங்களை இழப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

சராசரியாக ஒரு பொக்கெட்டில் உள்ள 20 சிகரெட்டுகளை புகைப்பதால் கிட்டத்தட்ட வாழ்நாளில் ஏழு மணிநேரத்தை மனிதன் பறிகொடுக்கிறான் என்று அந்த ஆய்வு தெரிவிக்கிறது. ஆண்கள் ஒவ்வொரு சிகரெட்டிலும் தங்கள் வாழ்நாளில் 17 நிமிடங்களை இழக்கிறார்கள், பெண்கள் 22 நிமிடங்களை இழக்கிறார்கள்.

நீண்டகால புகைப்பழக்கம் உடையவர்கள், தங்கள் வாழ்நாளில் 10 ஆண்டுகளை இழக்கிறார்கள் என்றும் புகைபிடித்தல் தீங்கு விளைவிக்கும் என்பதை மக்கள் பொதுவாக அறிந்திருக்கிறார்கள், ஆனால் அதை எவ்வளவு குறைத்து மதிப்பிடுகிறார்கள் என்று UCL இன் மதுபானம் மற்றும் புகையிலை ஆராய்ச்சி குழுவின் முதன்மை ஆராய்ச்சியாளரான வைத்தியர் சாரா ஜாக்சன் கூறுகிறார். புத்தாண்டில் இருந்து புகைப்பிடிக்காமல் இருந்தாலே தங்கள் வாழ்நாளில் ஒரு பாதியினை இழக்காமல் இருக்கலாம் என்றும் ஆண்டின் இறுதிவரை புகைபிடிக்காமல் இருந்தால் 50 நாட்கள் வாழ்க்கையை இழப்பதைத் தவிர்க்கலாம் என்றும் இங்கிலாந்து சுகாதாரத் துறை இந்த அறிக்கையை மேற்கோள்காட்டி 2025 இல் தங்கள் நாட்டு மக்களை



சிகரெட்டை நிறுத்த வலியுறுத்தியுள்ளது.

நீண்ட கால சிகரெட் புகைப்பவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இறக்கின்றனர். இது இங்கிலாந்தில் ஆண்டுக்கு 80,000 இறப்புகளை ஏற்படுத்துகிறது. மேலும் புற்றுநோய் இறப்புகளில் கால் வாசி சிகரெட் பழக்கத்தால் தான் ஏற்படுகிறது என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

# உலகின் அதிவேக ரயிலை அறிமுகப்படுத்திய சீனா

சீனா தனது அடுத்த தலைமுறை வணிக புல்லட் ரயிலின் முன்மாதிரியை மணிக்கு 450 கிலோ மீற்றர் சோதனை வேகத்துடன் அறிமுகப்படுத்தியுள்ளது. இது தற்போதைய சீன அதிவேக ரயில்களின் வேகத்தை முந்தி சாதனை படைத்துள்ளது.

சீன ரயில்வே குடும்பம் ஞாயிற்றுக்கிழமை (29), CR450 அதிவேக ரயிலை அறிமுகப்படுத்தியது, இதன் அதிகபட்ச வணிக இயக்க வேகம் மணிக்கு 400 ஆகும். எனினும் CR450 ரயிலானது மணிக்கு 450 கிலோ மீற்றர் சோதனை வேகத்தை எட்டியது. முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் - செயல்பாட்டு வேகம், ஆற்றல் நுகர்வு, உட்புற சத்தம் மற்றும் பிரேக்கிங் தூரம் ஒரு புதிய சர்வதேச அளவுகோலை அமைத்ததாக அதிகாரப்பூர்வ ஊடக நிறுவனங்கள் சுட்டிக்காட்டின. ஷங்ஹாய் புடாங் சர்வதேச விமான நிலையத்தை ஷங்ஹாய் நகரத்துடன் இணைக்கும் ஷங்ஹாய் மாக்லேவ், மணிக்கு 430 கி.மீ வேகத்தில் இயங்குகிறது, இது உலகின் அதிவேக வணிக ரயில் சேவையாகும்.

இதற்கு நேர்மாறாக, ஜப்பானின் புகழ்பெற்ற




ஷிங்கன்சென் புல்லட் ரயில்கள் மணிக்கு 320 கி.மீ வேகத்தில் பயணிக்கின்றன, அதே சமயம் ஜேர்மனியில் உள்ள ICE 3 ரயில்கள் போன்ற ஐரோப்பிய அதிவேக ரயில்கள் அதிகபட்சமாக மணிக்கு 350 கி.மீ வேகத்தைக் கொண்டுள்ளன.

CR450 விரைவில் வணிகச் சேவையில் நுழைவதை உறுதிசெய்ய, முன்மாதிரிகளுக்கான தொடர் சோதனைகளை சீனா ரயில்வே ஏற்பாடு செய்து, தொழில்நுட்ப குறிகாட்டிகளை மேம்படுத்தும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அண்டை நாடுகளான தாய்லாந்து மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளின் வழியாக வலையமைப்புக்களை உருவாக்கும் திட்டங்களுடன் சீனாவின் அதிவேக ரயில் அபிலாஷைகள் தொடர்கின்றன. 2021 ஆம் ஆண்டில், தெற்கு யுனான் மாகாணத்தில் உள்ள குன்மிங் நகரத்தை லாவோஸ் தலைநகரான வியன்டியானுடன் இணைக்கும் அரை-அதிவேக லாவோஸ்-சீனா ரயில்வே வலையமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

# நாடாளுமன்ற தேர்தலில் எலான் மஸ்க் ஆதிக்கம்; - ஜேர்மனி குற்றச்சாட்டு

அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். இந்த வெற்றிக்கு உலகின் மிகப்பெரிய பணக்காரரான எலான் மஸ்க் உதவி புரிந்தார். வெளிப்படையாக பிரசாரத்தில் ஈடுபட்டதுடன் மில்லியன் கணக்கில் தேர்தல் நிதி அளித்தார். இதனால் டொனால்ட் ட்ரம்ப் அவரை முக்கிய பொறுப்பில் நியமித்துள்ளார். இந்த நிலையில் ஜேர்மனி பொதுத்தேர்தலில் ஆதிக்கம் செலுத்த முயற்சி செய்கிறார் என ஜேர்மனி அரசாங்க செய்தி தொடர்பாளர் குற்றம் சாட்டியுள்ளார்.



எலான் மஸ்க் எக்ஸ் சமூக வலைத்தள பக்கத்தில் "ஜேர்மனிக்கான தீவிர வலதுசாரி கொள்கையால் மட்டும் தான் ஜேர்மனியை காப்பாற்ற முடியும்" எனக் குறிப்பிட்டிருந்தார். கருத்துக்கணிப்பு ஒன்றை மேற்கொள்காட்டி தனது கருத்தை வலுப்படுத்தியிருந்தார். இந்த நிலையில் ஜேர்மன் அரசு செய்தி தொடர்பாளர் கிறிஸ்டியன் ஹாஃப்மேன் "இதன் உண்மை என்னவெனில், எலான் மஸ்க் நாடாளுமன்ற தேர்தலில் ஆதிக்கம் செலுத்த முயற்சி செய்தி கொண்டிருக்கிறார். ஜேர்மனியில் தேர்தல், வாக்காளர்கள் வாக்குப்பெட்டியில் செலுத்தும் வாக்குகளால் முடிவு செய்யப்படுகிறது என்றார்.

# ஐசிசி ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர்

சர்வதேச கிரிக்கெட் சபையின் விருது பட்டியலில் இறுதியாக, ICC யின் ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரரை தேர்ந்தெடுப்பதற்கான பட்டியலை வெளியிட்டுள்ளது.

இப்பட்டியலில் திகைப்பூட்டும் நால்வில் மூவர் சோபர்ஸ் கிண்ணத்துக்கான தேர்வுப்பட்டியலில் கௌரவிக்கப்பட்டனர்.

ஹரி புஷரூக், 55.00 சராசரியாக 1,100 டெஸ்ட் ஓட்டங்களை எடுத்துள்ளார். மேலும் அக்டோபரில் முல்தானில் பாகிஸ்தானுக்கு எதிரான இங்கிலாந்தின் ஆரம்ப வெற்றியில் மறக்க முடியாத இரு சதம் உட்பட நான்கு சதங்கள் அடித்தார். அந்த போட்டியில் அவர் ஜோ ரூட்டுடன் 454 ஓட்டங்கள எடுத்துள்ளார்.

மேலும் அவரது அணி வீரர் ஒரு வருடத்திற்குப் பிறகு டெஸ்ட் பிரிவில் மீண்டும் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டில் டெஸ்டில் 71 விக்கெட்டுகளை வீழ்த்திய ஒரே பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா - 14.92 சராசரியுடன் இடம் பிடித்துள்ளார்.

இலங்கையின் சாதனை வீரர் கமிந்து மெண்டிஸ் 1,049 ஓட்டங்களுடன் 74.92 என்ற சராசரியுடன், மேலும் 26 வயதான அவர் ஒவ்வொரு முறையும் அரை சதம் அடித்துள்ளார். அவரது முதல் எட்டு டெஸ்ட் மற்றும் 75 ஆண்டுகளில் மிக வேகமாக 1,000 டெஸ்ட் ஓட்டங்களை எடுத்துள்ளார்.

ICC Men's Test Cricketer of the Year
ஹரி புரூக் (ENG),
ஜஸ்பிரித் பும்ரா (IND),
கமிந்து மெண்டிஸ் (SL),
ஜோ ரூட் (ENG)







## பிரிஸ்பேன் ஓபன் டென்னிஸ் பெண்கள் சபலென்கா முன்னேற்றம்

பிரிஸ்பேன் ஓபன் டென்னிஸ் போட்டிகள் அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடைபெற்று வருகிறது.


பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் பெலாரசின் அரினா சபலென்கா, மெக்சிகோவின் ஜெனாடா சராசுவா உடன் மோதினார்.

இதில் சபலென்கா 6-4, 6-0 என்ற செட் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

02 ஆம் திகதி நடைபெறும் அடுத்த சுற்றில் சபலென்கா, கஜகஸ்தானின் யுலியா புடின்ட்சேவாவுடன் மோதவுள்ளார்.



## அஸ்வினை பின்தள்ளிய அவுஸ்திரேலிய வீரர்



டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர்கள் பட்டியலில் நாதன் லயன் தமிழக வீரர் அஸ்வினை பின்தள்ளி முன்னணியிலுள்ளார்.

இந்திய அணிக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 184 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த டெஸ்டில் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் நாதன் லயன் (Nathan Lyon) 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதன்மூலம் அவரது டெஸ்ட் விக்கெட்டுகள் எண்ணிக்கை 538 ஆக அதிகரித்ததில் தமிழக வீரர் அஸ்வினை முந்தி (537) 7வது இடத்தை லயன் பிடித்தார்.

முதலிடத்தில் முரளிதரன்

அஸ்வின் 106 டெஸ்ட்களில் 537 விக்கெட்டுகளை வீழ்த்திய நிலையில், லயன் 133 டெஸ்ட்களில் 538 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

அதிக டெஸ்ட் விக்கெட்டுகள் வீழ்த்தியவர்கள் பட்டியலில் ஜாம்பவான் முத்தையா முரளிதரன் (Muttiah Muralitharan) 800 விக்கெட்டுகளுடன் முதலிடத்தில் உள்ளார்.



## டிராவிஸ் ஹெட்டின் மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் சர்ச்சை?

இந்தியாவுக்கு எதிரான 4-ஆவது டெஸ்ட்டில் அவுஸ்திரேலியா 184 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதையடுத்து, 5 ஆட்டங்கள் கொண்ட தொடரில் அவுஸ்திரேலியா 2-1 என முன்னிலை பெற்றது.

இந்தப் போட்டியில் இந்தியாவின் ரிஷப் பந்த் விக்கெட்டினை வீழ்த்திய ஆஸி. வீரர் டிராவிஸ் ஹெட்டின் வித்தியாசமான கொண்டாட்டம் இந்தியர்கள் பலரையும் முகம் சுழிக்க வைத்துள்ளது.

சமூக ஊடகங்களில் இந்தியர்கள் பலரும் "இது ஆபாசமான கொண்டாட்டம்" என டிராவிஸ் ஹெட்டுக்கு எதிராக கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளார்கள்.

**இது குறித்து ஆஸி. கேப்டன் பாட் கம்மின்ஸ் கூறியதாவது:**





டிராவிஸ் ஹெட் விரல் சூடாக இருப்பதால் ஒரு கோப்பை ஐஸ் கட்டியில் வைக்க வேண்டும். அதுதான் இது. அது வழக்கமாக எங்களுக்குள் நடக்கும் நகைச்சுவைதான். இது ஏற்கனவே காபா அல்லது வேறு எங்கோ கூட ஹெட்டுக்கு விக்கெட் விழுந்தபோது நேராக குளிர்சாதனபெட்டிக்கு சென்று ஐஸ் பக்கெட்டினை எடுத்து அதில் விரலை விட்டு நாதன் லயனுக்கு முன்பாக நடந்தார். அதுபோலத்தான் இது நகைச்சுவையானது. இதுவும் அதுவாகத்தான் இருக்கும், வேறெதுவும் இல்லை என்றார்.

போட்டிக்குப் பிறகு டிராவிஸ் ஹெட் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஐஸ் கோப்பையில் விரலை விட்டபடி இருக்கும் புகைப்படத்தினை பகிர்ந்துள்ளார். அவர் ஏற்கனவே இதுபோல் செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரிஸ்பேன் ஓபன் டென்னிஸ்: ஜோகோவிச் முதல் சுற்றில் வெற்றி

பிரிஸ்பேன் ஓபன் டென்னிஸ் போட்டிகள் அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், அவுஸ்திரேலியாவின் ரிங்கி ஹிஜிகிடா உடன் மோதினார்.

இதில் ஜோகோவிச் 6-3, 6-3 என்ற செட் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

03 ஆம் திகதி நடைபெறும் அடுத்த சுற்றில் ஜோகோவிச், பிரான்ஸ் வீரர் கேல் மான்பில்ஸ் உடன் மோதவுள்ளார்.



## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் : முதல் அணியாக இறுதி போட்டிக்கு தென்னாபிரிக்கா

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு தென் ஆபிரிக்கா அணி தகுதி பெற்றுள்ளது. முதல் முறையாக இந்த அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளது.

2 ஆண்டுகளுக்கு ஒருமுறை டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. 2 ஆண்டுகளில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் அதிக முறை வெற்றி பெற்று, வெற்றி சதவீதம் அதிகம் கொண்ட 2 அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.



அந்த வகையில் இரு முறை நடந்து முடிந்துள்ள டெஸ்ட் சம்பியன்ஷி ப் போட்டியில் இந்தியா பங்கேற்றது. இருப்பினும் கிண்ணத்தை கைப்பற்ற முடியவில்லை.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 01ம் திகதி புதன்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.